# அறம் வளர் இளந்தமிழ்

★ உண்மையே கடவுள் ★

✳ உடலுழைப்பு ✳ சிக்கனம் ✳ சமத்துவம் ✳

சாதி, சமய, இனவேற்றுமையற்ற சிறுவர்களுக்கான சஞ்சிகை



எமது நாட்டின் நல்
இயற்கை வளமாம் — பனைமரம்
அதனை நன்றே வளர்த்து
எம் பிற்காலச் சந்ததியும்
பயன்பெற வேண்டுமென
இன்றே நடுங்கள் நல்வித்தை.

அடி முதல் தலை வரை
நன்மையே மனிதனுக்காய்
அர்ப்பணித்திருக்கும் அந்தக்
கற்பக தருவை — நாமும்
இன்றே எம் நாட்டுக்காய் நட்டு
நற்பயன் பெற்று உயர்வோமாக.


ஒளி: 3    14-06-1994    சுடர்: 3

சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகை — பிரதிகள்: 2131

முடிவுவிலை: 9/70

விநாயகர் தரும நிதிய இலவச வெளியீடு — பக்கங்கள்: 49

ரு.

# சமர்ப்பணம்



இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள்சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும், எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரகமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

புலோலி மேற்கு, — நிறுவனர்.
14-06-1994 விநாயகர் தரும நிதியம்

---

மேற்பார்வை – ஆலோசனை
நெறிப்படுத்தல்:
நிறுவனர் வி. த. நிதியம்
ஆசிரியர்:
வ. ச. செல்வராசா
அச்சமைப்பு:
விநாயகர் தரும நிதிய
அச்சகம்.
கடிதத் தொடர்பு:
நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

---

வாசக நெஞ்சங்களே!
உங்களது கருத்துக்களையும் ஆக்கங்களையும் அன்போடு எதிர்பார்க்கிறோம்.

தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்!

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

— நிறுவனர்.

★ △ ★

## இதழின் உள்ளே...


- எண்ணங்கள்
- குறளின் கூற்று
- சொல்லடுக்கு
- ஒரு சொல்லில் பல பொருள்
- அறிவியல் அரங்கு
- தெரிந்து கொள்ளுங்கள்
- முதலுதவி
- எய்ட்ஸ் பத்து வருடங்களின் பின்...
- புதிர்
- புதிய கலாச்சாரங்கள் — கதை
- பிரச்சினைகளும் - தீர்வுகளும்
- விஞ்ஞான வி'நாடி வினாப் போட்டி 1994 — விமர்சனம்
- சிந்தனைக்குச் சில கருத்துக்கள்
- ஒழுக்கம் உயர்வைத் தரும்
- பாலின் நிறம் வெள்ளையாக இருப்பதேன்?
- மறந்தால் தானே நினைப்பதற்கு — கதை
- சர்வதேச அமைப்புகள்
- நன்றாய் விடியும் நாளைப் பொழுது — கவிதை
- நொடியும் - விடையும்
- மன்னனும் வாய்மையும் — கதை
- கவலைக்கு இடம் கொடாதே!


# அறம் வளர் இளந் தமிழ் எண்ணங்கள்

இவ்விதழ் சிறிது காலதாமதமாகியே வெளிவருகின்றது. எமது உடல் நிலை காரணமாகவும், கைகள் இரண்டும் செயற்பட முடியாத நிலையிலும் ஓரிரு மாதங்கள் காலதாமதமாகி விட்டது. இக்கால தாமதத்தை கருத்தில் கொள்ளாது அறம் வளர் எண்ணங்களை வளர்க்கும்படி இளந்தமிழ் வாசகர்களை அன்புடன் வேண்டுகின்றோம். ஒரு சிறு பிரதியைக்கூட காசு கொடுத்து வாங்க முடியாத நாம் சிறுவயதில் அறநெறிக் கல்வியைப் பயின்ற காரணத்தினால்தான் இதனையும் இது போன்ற பல வெளியீடுகளையும் தரமுடிகின்றது என்பதை சகலரும் கவனத்தில் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இங்கே தமிழ் இளந் தலைமுறையினர் அறத்தை வளர்க்க வேண்டும் என்ற கருத்தையே அடக்கி இருக்கின்றோம். ஒளவையார் தனது முதல் குறளிலேயே ''அறத்தை விரும்பு'' எனத்தான் குறிப்பிடுகின்றார். இதை நன்கு ஆராயும்போது பல பல விளக்கங்களும், ஞானிகள், நாயன்மார்களின் வாழ்க்கை முறைகளும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

அறம் என்றால் என்ன என்று சிந்திப்போம். எல்லா உயிர்களிலும் கொள்ளும் இரக்கத்தையே இது குறித்து நிற்கின்றது. எந்த உயிரும் துன்பப்படுவதை அறநெறியாளன் விரும்பமாட்டான். எமது தமிழ் சமுதாயத்தில் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னே வாழ்ந்த நாயன்மார்கள், ஞானிகள் காட்டிய வழிகளை நாம் நன்கு ஆராய வேண்டும். அவர்கள் எப்படி ஞானிகள் ஆனார்கள்? எவ்வாறு ஞான ஒளியிலே முத்தியடைந்தார்கள்? என்பதை சிந்திப்பவர் மிகமிகக் குறைவு. இவர்கள் கடும் உடலுழைப்பால் தமது கையாலேயே தானியங்களை விளைவித்து அத்தானியங்களைத் தமது கையாலேயே சுத்தமாக்கி தமது வயிற்றுப் பசிக்கு உண்ணும்போது தென்படும் ஏழையின் பசியை நீக்கிய பிற்பாடே தமது பசியினை நீக்கியுள்ளார்கள். இவர்களது எண்ணங்களைப்போல் இன்றைய காலகட்டத்தில் எவரும் உருவாகுவதில்லை. இதற்கு மூலகாரணம் இளம்பராய வாழ்க்கையே ஆகும்.

ஐந்து வயதிலே ஊட்டப்படும் அறநெறிக்கருத்துக்களே காலம் செல்லச் செல்ல அவர்களை ஞானிகளாக உருவாக்கி விடுகிறது. இன்றைய காலத்தில் இளம்பராயத்தினர் பெற்ற கல்வி சரியாக வராத காரணத்தினால் உயர்வகுப்பு மாணவர்களிடையே பல விதமான குரோதங்கள் ஏற்படுகின்றன. மேல் நிலைப் படிப்புக்கு ஆளாகிய பல மாணவர்களும் புதிதாக வரும் மாணவர்களை ''ராக்கிங்'' போன்ற துன்புறுத்தலால் மனநிலையைப் பாதிக்கச் செய்கிறார்கள். அறநெறி ஊறி வத்திருப்பாராயின் இக்கருத்து ஏற்பட இடமில்லை. எல்லோரும் வாழ வேண்டும், எல்லோரும் உண்ண வேண்டும், எதிர்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்ற அறநெறிச் சிந்தனை இவர்களிடம் சிறிதளவேனும் இல்லை என்பதையே நாம் நினைக்கக் கூடியதாகவுள்ளது.

எந்த விதமான மரத்தையோ, எவ்விதமான பிராணிகளையோ பறவைகள், மிருகங்களையோ இளம் வயதில் சரியான முறையில் வளர்த்தால்தான் அவை பிற்காலத்தில் பெரும் பயனை தரக்கூடியதாக அமைகிறது என்பதனை எல்லோருக்கும் அறியத் தருகின்றோம். இளமையில் ஊட்டப் பெறும் உடலுழைப்பும் கடும் சிக்கன வாழ்க்கையும், எவ்வுயிர்களையும் சமத்துவமாகப் பேணும் மனப்பான்மையும் உருவாவதற்கு அறநெறிக்கருத்துக்களே மூல காரணமாக அமைகின்றது.

''மணிவாசகர்'' சரித்திரத்தை பிரித்து ஆராய்ந்து பார்ப்போமானால், பல உண்மைகள் தென்படுகின்றன. மந்திரிப் பதவி வகித்த மணிவாசகர் குதிரை வாங்கப் போனவிடத்து அறநெறி எண்ணங்கள் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. அவ்வறநெறி எண்ணங்கள் மேலோங்கியதும் அவர்பட்ட கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. அவ்வரசனால், அரசதண்டனை நேரும் என்று அறிந்தும் அவரது மனநிலை அறநெறியையே நாடியுள்ளது.

இதிலிருந்து ஒன்றை உணரக்கூடியதாகவுள்ளது. அறத்தை வளர்க்க வேண்டுமானால் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இவரது தண்டனையின் நிமித்தம் வைகை பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இவ்வைகைக் கரையை அடைப்பதற்காக முழுமுதற் கடவுளான சிவபெருமானே கூலியாளாக வருகின்றார். கூலியாக உருந்த பிட்டையே ஏற்று அவ்வேலையைச் செய்கிறார். சிவபெருமானே ஒரு மூதாட்டிக்கு உருந்த பிட்டுக்கு கூலியாளாக வருகிறார் என்றால், இதிலுள்ள உண்மைத் தத்துவங்களை அறிய வேண்டும். பெருமான் நினைத்தால் அவ்வைகையை ஒரு நொடியில் அடக்கிவிடலாம். ஆனால் இங்கு மக்களுக்கு அற நெறியை ஊட்டுவதற்காகவே இவ்வாறு செய்கின்றார். கரையை முறைதவறி அடைத்த தன்மையினால் அரசனது பிரம்படிக்கு ஆளாகின்றார். முழுமுதற் கடவுள் ஒரு மனித அரசனிடம் ஏன் பிரம்படி பெறவேண்டும்.

இங்கே நாம் உணரும் அறநெறிகள் பலஉண்டு. கடமை தவறிய எவராய் இருந்தாலும் தண்டனை அடைந்தே தீருவர் என்பதில் எவ்வித மயக்கமும் தேவையில்லை. காலங்கள் சிலது முன் பின்னாய் ஏற்படலாம் ஆனால் வினைப்பயன் எவ்வகையிலாவது, எப்பிறவியிலாவது அடைந்தே தீர வேண்டும் என்பதனை உணரக் கூடியதாகவுள்ளது.

மணிவாசகர் இறுதியில் ஒளியணு கூடி பிறப்பை நீக்கி ஞான ஒளியில் இரண்டறக் கலக்கிறார் என்பது மிகமிகச் சரியானதே. இதை கற்கும் மாணவர்களும், பெரியவர்களும் ஒரு கதையாக எடுக்கிறார்களே அன்றி விஞ்ஞான அமைப்பான உண்மை என்பதை உணர்வதில்லை. இதை சகலரும் விஞ்ஞான ரீதியில் உணர்ந்து மெஞ்ஞான அறிவைப் பெற்று எதிர்வரும் பிறப்புக்களை நீக்குமாறு அன்புடனும், பண்புடனும், பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

14 - 06 - 1994

—நிறுவனர்—





# குறளின் கூற்று

—குமரன்—

தமிழர் பண்பாட்டின் மிக முக்கிய அம்சம் விருந்தோம்பல். சங்க இலக்கியங்களில் தமிழரின் விருந்தோம்பும் திறன் முக்கியமாகக் காட்டப்பட்டுள்ளது. அரசர்கள் தம்மை நாடி வருவோர்க்கும், தம் திறனால் பாடல் புனையும் புலவருக்கும், தன்னை அண்டியுள்ளோருக்கும் அறுசுவை உண்டி கொடுத்து அவர்களை ஆதரிப்பர் என்பதைச் சங்க காலச் செய்யுள்களில் காணமுடிகிறது.

முதலேழு வள்ளல்கள், இடையேழு வள்ளல்கள், கடையேழு வள்ளல்கள் என வள்ளல்கள் பலர் இருந்ததையும் அவர்கள் இல்லையெனாது வாரி வழங்குவதையும் இவற்றின் மூலம் நாம் அறிகிறோம்.

அதுபோன்று மகாபாரதத்திலே எதையும் கொடுக்கும் ஒரு கொடை வள்ளலாக கர்ணனைக் காண்கிறோம். இறுதியில் அவன் தன்னோடு கூடப்பிறந்த காதணியையே தானமாக வழங்குகிறான். இவ்வாறு எமது பண்பாட்டோடு விருந்தோம்பல் என்பது ஊறி வளர்ந்து உள்ளது.

சிலர் சொல்வார்கள் எச்சில் கையால் காகமும் விரட்டான் என்று. எச்சில் கையால் காகத்தை விரட்டினால் கையில் ஒட்டியிருந்த சோறு வீழ்ந்து விடும் என்பது இதன் கருத்து. இவ்வாறான கஞ்சர்களைக் கேலியாக நகைப்புக்கிடமாகப் பார்க்கும் மனோநிலையும் காணப்படுகிறது.

விருந்தோம்பலால் நாம் மகிழ்வடைகிறோம். அதேவேளை விருந்துண்பவன் பூரிப்படைகிறான். இதனால் இருபுற மகிழ்ச்சி ஏற்படுகிறது.

எனவே தான் விருந்தோம்பலை திருவள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

வந்த விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் ஒருவர், விருந்தாளிக்காக தானுண்ணாமல் பார்த்திருக்கும் ஒருவர் இவர்களெல்லாம் தேவர்களுக்கு விருந்தினராவார் என்கிறார் வள்ளுவர். அவர்கள் உயர்வாக பதிக்கப்படும் நிலையைத்தான் வள்ளுவர் இதில் கூறுகிறார்.

''செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு''

இதேபோன்று விருந்தினரைக் காப்பவனது வீட்டில் செல்வம் கொழிக்கும் என்றும், அவனது வாழ்க்கை ஒருபோதும் வீணாவதில்லையென்றும் குறிப்பிடுகிறார்.

## ✻ சொல்லடுக்கு ✻

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மா | சி | அ | கோ | ண | ற் | பு | ளி | ரு |
| லா | து | ட | ய | மி | ல | ரே | ம | இ |
| ப | ளு | ளை | றி | ஃ | க | யு | மி | ல |
| ப் | னை | ளீ | வே | ம் | பு | மி | பூ | ந் |
| பா | ன் | வே | லை | எ | ளி | ஒ | வ | தை |
| ளி | தெ | கு | ம | ர | ம் | சு | ர | அ |
| மீ | ல் | ச | வு | க் | கு | சி | சு | த் |
| தி | யா | ல் | றி | யா | வ | ற | ணை | தை |
| க | ஆ | ல் | டி | யை | எ | லி | லை | பா |

இதில் 81 கட்டங்கள் உள்ளன. இவற்றில் சில மரங்களது பெயர்கள் உள்ளன. எங்கே கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.

### விடைகள்

(1) மா (2) மாதுளை (3) வேம்பு
(4) புளி (5) பலா (6) மலைவேம்பு
(7) அரசு (8) ஆல் (9) சவுக்கு
(10) பூவரசு (11) கோணற்புளி (12) இலந்தை
(13) பனை (14) தென்னை (15) பப்பாளி
(16) யாவறணை (17) பாலை

மிகப் பெரிய பாலைவனம் தென்னாபிரிக்காவில் உள்ள சகாரா. பரப்பு கிழக்கு மேற்காக 5150 கி. மீ. வடக்குத் தெற்காக 2250 கி. மீ. மொத்தப் பரப்பு 84,00,000 ச. கி. மீ.



## ஒரு சொல்லில் பல பொருள்

### எங்கே முயன்று பாருங்கள்!

தொகுப்பு:
சு. சுதாமதி — யா/க. ம. ம. வித்தியாலயம்.

நாம் தரும் சொல் | சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |

பொருளைக் கண்டு பிடிப்பதற்காக கேள்விகளைக் கீழ்த்தருகிறோம்:- கேள்விகளுக்கான விடைகள் சொல்லில் மறைந்துள்ளது.

1) குறைந்தது என்பதைக் குறிப்பது
2) உறைப்பைக் குறிப்பது
3) தலைவனைக் குறிப்பது
4) ஒருவித பண்டத்தைக் குறிப்பது
5) கோபம் வந்தால் கூறுவது
6) எது வந்தால் பத்தும் பறக்கும்
7) ஒரு இடத்தின் பெயர்
8) கூடியது என்பதைக் குறிப்பது
9) பெண்ணின் பெயர்
10) வீரத்தைக் குறிப்பது
11) நாட்கள் குறிப்பது
12) சிவபெருமானைக் குறிப்பது
13) பொதியை குறிப்பது
14) இளங்கோவடிகள் இயற்றிய நூல்

### கேள்விகளுக்கான விடைகள்

(1) சில (2) காரம் (3) பதி
(4) பலகாரம் (5) சி (6) பசி
(7) காசி (8) பல (9) ரதி
(10) பலம் (11) காலம் (12) பரம்
(13) சிப்பம் (14) சிலப்பதிகாரம்

உ




## ஒசோனில் ஓட்டை விழுந்தால் . . .

— தீபன் —

ஒசோன்படை என்கிறோமே அது என்ன? அது ஒருவகை ஒட்சிசன் வாயுப்படைதான். இது பூமியின் மேற்பரப்பிலிருந்து ஒரு குறிப்பிட்டளவு உயரத்தில் காணப்படுகிறது. இதன் மூலம் மனிதன் பல நன்மைகளைப் பெறுகிறான். பூமியும் பாதுகாப்புப் பெறுகிறது எப்படி?

புவிமேற்பரப்பில் அதாவது நாம் நிற்கும் இடத்தில் இருந்து 30 கிலோமீற்றர் உயரத்தில் வான மண்டலத்தில் ஒரு பாதுகாப்பு வளையமாக இவ்வாயுப்படை விளங்குகிறது. இவ்வாறு உள்ள ஓசோன் படை சூரியனிலிருந்து வெளிவிடப்படும் தீங்குள்ள புற ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடைவதைத் தடுக்கிறது.

இது அளவில் மிகச் சிறியது. ஒரு இலட்சத்திற்கு ஒன்று என்ற விகிதத்திலேயே இக்காற்றுப்படை உள்ளது. இந்த ஓசோன்படை கொங்கோட் விமானங்கள் பறப்பதால் அது வெளிவிடும் புகையினாலும், பொலித்தீன் எரிப்பதால் உண்டாகும் வாயுவினாலும், 'எயர் கண்டிசன்' (குளிரூட்டி) வெளிவிடும் வாயுவினாலும் பாதிப்படைகிறது.

இது பாதிப்புற்றால் புற ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடையும். இதனால் பூமியில் உயிரின அழிவு ஏற்படும்.



உ

## பூமி பற்றிய சில தகவல்கள்

| | |
|---|---|
| பூமியின் மொத்தப் புறப்பரப்பளவு | 51, 01, 00, 500 சதுர கிலோ மீற்றர். |
| நிலப்பரப்பு | 14, 89, 50, 800 ,, ,, ,, |
| நீர்ப்பரப்பு | 36, 11, 49, 700 ,, ,, ,, |
| பூமியின் எடை | $598 \times 10^{24}$ கிலோ கிறாம் |
| சூரியனிலிருந்து தூரம் | 14, 94, 07, 000 கிலோ மீற்றர் |
| பூமியின் அடர்த்தி | 5 · 5 |

கோளவடிவமானது பூமி. நான்கு கோளங்களாக பூமியின் மேற்பகுதியை வகைப்படுத்தலாம். அவை பாறைக்கோளம், நீர்க்கோளம், வளி மண்டலம், உயிர்க்கோளம் என்பன ஆகும்.

பாறைக்கோளம் என்பது பூமியின் மேற்பரப்பில் காணப்படும் நிலப்பகுதிகளையும், கடலின் அடிப்பாகத்தையும் குறிக்கின்றது. நீர்க்கோளம் என்பது கடல்கள், நதிகள், ஏரிகள் முதலான நீர்ப்பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. வளிக்கோளம் நீர், நிலப் பரப்புக்களைப் போர்த்தி புவியை மூடியுள்ள காற்று மண்டலம் ஆகும். இவை மூன்றிலும் உயிரினங்கள் வாழும் பகுதிகளை உயிர்க்கோளம் என்கிறோம்.

புவியின் உட்பாகம் மூன்று பகுதிகளை உடையது. புவியோடு இடையோடு, கோளவகம் என்பன அவை. புவியோடு என்பது புவியின் மேற்பரப்பிலிருந்து 45 முதல் 56 வரையான ஆழத்தில் இது காணப்படுகிறது. இதில் மேல்மண் போக சீயல் சீமா என இரு பாறைப் படைகள் உள்ளன. சீயல், சிலிக்கா, அலுமினியம் என்பவற்றாலும், சீமா, சிலிக்கா, மக்னீசியம் ஆகியவற்றாலும் ஆனவை.

இதனையடுத்து பாகுத்தன்மை கொண்டதாக இடையோடும், இடையோட்டை அடுத்து மையப் பகுதியில் கோளவகமும் உள்ளன.

— மயூரன் —

உலகின் மிக உயர்ந்த விருது நோபல் பரிசு. இதை உருவாக்கியவர் அல்பிரட் நோபல் ஆவார். இவர் டைனமைட்டைக் கண்டு பிடித்தார். அதைக் கண்டு பிடித்ததற்காக வருத்தப்பட்டு, தனது 300 கோடி ரூபா சொத்துக்களைக் கொண்டு, நோபல் பரிசை இவர் ஆரம்பித்தார். 1901-ம் ஆண்டு முதல் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

# விண்வெளி காண்போம்

அங்கம்: **4** — *நித்தியா*

**தொ**லை நோக்கிகள் மூலம் விண்ணை ஆராயும் செயல்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமன்றி செய்மதிகள் மூலமும் விண்வெளி ஆய்வு நடத்தப்படுகிறது.

விண்வெளியை ஆய்வு செய்யும் இராட்சதத் தொலை நோக்கிகள் மிக உயரமான இடத்திலேயே வைக்கப்படுகின்றன. அனேகமாக எல்லா நாடுகளிலும் மிக உயர்ந்த மலைகளில் இவை பொருத்தப்பட்டுள்ளன.

மலைகளில் இவை பொருத்தப்பட்டுள்ளமைக்கு என்ன காரணம் தெரியுமா? சாதாரண இடங்களில் தொழிற்சாலைகள் நிறைய உள்ளன. வாகனப் போக்குவரத்து உள்ளது. இது போன்ற எண்ணற்ற செயல்களால் தூசிகள் வெளிவிடப்படுகின்றன. இந்தத் தூசிகள் தொலைநோக்கிகளில் படியுமானால் அவையே ஒரு நட்சத்திரக் கூட்டம் போல் தெரியத் தொடங்கி விடும். அதனால்தான் தூசிகள் மிகமிகக் குறைவாக உள்ள மலைகளில் இவற்றை அமைக்கின்றனர்.

உலகிலேயே முதலில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தொலை நோக்கி அமெரிக்காவில் உள்ளது. அமெரிக்காவின் பலோமர் மலையில் உள்ள இதன் விட்டம் 200 அங்குலமாகும்.

இவ்வாறான தொலைநோக்கிகள் அமைந்துள்ள இடம் உருளை வடிவமான ஒரு சட்டத்தைக் கொண்டிருக்கும். அதற்கு மேல் அரைக்கோள வடிவத் தளத்தில் தொலைநோக்கி பொருத்தப்பட்டிருக்கும். அரைக்கோளத் தளம் எந்தப் பக்கமும் சுழலும் எந்தப் பக்கம் நாம் பார்க்க வேண்டுமோ அந்தப்பக்கம் அரைக்கோளத்" தளமும் சுழலும். ஒரு விசையை அழுத்தினால் போதும். அதற்கேற்ப தொலை நோக்கிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட முடியும். வெட்டு இடைவெளிகள் மூலம் விண்ணைத் தொலைநோக்கிக் கூடாகக் கண்டு கொள்ளலாம்.

ரஷ்யாவில் 240 அங்குலத்திலும், இந்தியாவில் 100 அங்குலத்திலும் இத்தகைய விண்வெளி ஆய்வுக்கான இராட்சத தொலை நோக்கிகள் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன.

வானொலி அலைகள் பற்றி நாம் அறிந்திருக்கிறோமல்லவா? நாம் வானொலி கேட்கிறோமெனில் அந்த ஒலி ஒருவித அலைகளாலானதே. இந்த வானொலி அலைகளைக் கொண்டு - குழிவாடித் தொலைநோக்கிகளை விடத் தெளிவாகத் தெரியக் கூடிய தொலை நோக்கிகள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கென வானொலித் தொலைநோக்கிகள் *(Rodio Telescope)* பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் விண்ணாய்வு மேலும் சுலபமடைந்துள்ளது.

— வரும் —



# ஒலி உலகம்

**வா**னொலித் தொலைக்காட்டிகள் வானவியல் துறையில் ஒரு புது உலகத்தையே திறந்து காட்டியது. உலகிலேயே மிகப் பெரிய ஒளியியல் தொலைக்காட்டிகளின் காட்சிப்புலத்திற்கும் அப்பாற்பட்ட விண்மீன்களையும், உடுமண்டலங்களையும் உற்றுக்கேட்க வானொலித் தொலைக் காட்டிகள் பெரிதும் உதவுகின்றன.

ஒலி பரவும் ஊடகத் துகள்களின் அதிர்வுகளினாலேயே அலை பரப்பாகின்றன. பரவும் திசையில் அழுத்த ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் போது அவை புல்லாங் குழலினுள் காற்றலை மாதிரி நெடுக்காக பரவுகின்றன.

ஒலியின் முக்கிய இரண்டு பண்புகளாவன ஒன்று அதிர்வெண், மற்றொன்று தீவிரம். அதிர்வெண்ணாவது ஒரு நொடிக்குள் எழும் ஒலி அதிர்வுகளின் எண்ணிக்கை இதனை ஹெர்ட்க (கேட்ஸ் - *Hertz*) என்னும் அலகுகளால் குறிக்கின்றனர்.

ஒலித்தீவிரம் டெசிபெல்கள் என்கிற அளவு முறையால் அளவிடப்படும். டெசிபெல் என்பது ஒரு பெல் அளவின் பத்திலோர் பாகம் இதைச் சுருக்கமாக டி. பி. எனலாம். தொலைபேசியைக் கண்டுபிடித்த அலைக்சாண்டர் கிரகாம் பெல் பெயரால் இது அழைக்கப்படுகிறது. இந்த அளவுகோல் லாகிரித்மிக் *(Logrithmic)* முறையில் அமைகிறது. 10 டெசிபெல் என்றால் ஒரு மில்லிவாட் திறனைப் போல் 10 மடங்கு.

மனிதனால் நொடிக்கு 20,000 அதிர்வுகளுக்கு மேற்பட்ட ஒலியைக் கேட்க இயலாது. 20,000 கெக்டர்கள் மேல் அதிர்வெண் உடைய கேளா ஒலியை புற ஒலி என வழங்கலாம். வௌவால்கள் இந்த புற ஒலியினை அலைபரப்பி அதன் எதிரொலிப்பைக் கவனித்தே தாம் பறக்கும் வழியில் தடை இருப்பதனை உணருகிறது. எதிர் ஒலிப்பு முறையில் கடலின் ஆழத்தை அறியவும் உலோகங்கள், பிளாஸ்டிக்குகளினால் தயாரித்து வார்ப்புப் பொருட்களில் உள் வெடிப்புக்கள், துளைகள், விரிசல்கள் போன்ற ஏதேனும் பிசிறுகள் இருப்பதைக் கண்டு துலக்கவும் இந்த புற ஒலி அலைகள் பெரிதும் உதவுகின்றன.

உ

## விண்வெளிப் பயணம் சம்பந்தமாக சில தகவல்கள் . . .

★ விண்வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் அறிஞர்:
சேர் ஐசாக் நியூட்டன் (1642 – 1727) வெளியிட்ட நூல் இயற்கைத் தத்துவத்தின் கணிதக் கோட்பாடுகள்.

★ பூமியில் இயக்கப்பட்ட முதல் ஓடம்:
சந்திரனில் இறங்கிய ஆளற்ற ''லூனா கோடி'' எனும் ஓடம், 1970 நவம்பர் 17–ல் பூமியில் இருந்து இயக்கப்பட்டது.

★ விண்வெளியைச் சுற்றி வந்த முதல் செயற்கைக்கோள்:
ரஷ்யாவின் ''ஸ்புட்னிக்'' 1957 அக்டோபர் 4–ல் ஏவப்பட்டது: எடை 83·6 கிலோ கிராம், 2285·9 கிலோ மீற்றர்கள் உயரத்தில் மணிக்கு 28565 கிலோ மீற்றர்கள் வேகத்தில் இயங்கியது.

★ முதல் விண்வெளி வீரர்:
யூரிகாகரின் 1961 ஏப்ரல் 12 – இல் 4 · 65 தொன் எடையுள்ள ''வாஸ்டாக்'' (கிழக்கு எனப் பொருள்படும்.) விண்கலத்தில் 89·34 நிமிடங்களில் ஒருமுறை புவிச் சுற்றித் திரும்பினார்.

★ முதல் விண்வெளி வீராங்கனை:
வாலெண்டினா தெரஸ்கோவா எனும் ரஷ்யப் பெண்மணி, 1963 யூன் 16 இல் வாஸ்டாக் – 6 விண்கலத்தில் 2 நாட்கள் 22 மணிக்கூறுகள் 42 நிமிடங்களில் 48 முறை புவியைச் சுற்றினார். ஸ்வெத்லேனா சாவித்ஸ்கயா எனும் ரஷ்ய மங்கை இரண்டாவது விண்வெளி வீரர்ங்கனை.

★ விண்வெளியில் இறங்கி நடந்த முதல் வீரர்:
அலெக்ச் ஏ. லியனெவ் 1965 மார்ச் 18 அன்று தனது வாஸ்கோட் – 2 (Voskhod – 2) விண்கலத்திலிருந்து இறங்கி ஊர்திக்கு வெளியே நிறம்படச் செயற்பட்டவர்.

---

யப்பான் தலைநகர் டோக்கியோ – பரப்பு 377765 ச. கி. மீ. மக்கள் தொகை 12,45,00,000 மொழி. யப்பானின் எழுத்தறிவு 99%. சமயம் ஷிண்டோயிசம், புத்தமதம். நாணயம் யென். 1 டாலர் 118·58 யென். தனிநபர் வருமானம் 254,30 டாலர்கள்.



உ

## தெரிந்து கொள்ளுங்கள்

1) உலகின் மிகப்பெரிய பறவை ஒஸ்ரிச்
2) உலகின் மிகப்பெரிய கடற்பறவை அலிபட்ரஸ்
3) இறக்கை இல்லாத பறவை கிவி
4) அதிக உந்தும் பறவை புறா
5) மிகப்பெரிய முட்டையிடும் பறவை தீக்கோழி
6) மிக வேகமாகப் பறக்கும் பறவை ஒஸ்ரிச்
7) நீண்ட காலம் வாழும் பறவை ஹம்மிங்பேட்
8) உலகின் மிகப்பெரிய மீனினம் ஹலிபட்
9) உலகின் மிகப்பெரிய எரிமலை முலைவாகிகே
10) உலகின் மிகப்பெரிய நூதனசாலை பிரிட்டிஷ்
11) கடலில் அலை மோதக் காரணம் சூரிய சந்திர இழுப்பு சக்தி
12) இலங்கையின் நாணய அலகுமுறை '1872 ம் ஆண்டு உருவானது (ரூபா, சதம்)
13) 'பிரைல்' முறை என்றால் பார்வையற்றோர் கைவிரல்களால் எழுதக் கற்கும்முறை
14) காந்திஜிக்கு ''மகாத்மா'' என்னும் பட்டத்தைச் சூட்டியவர் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்
15) எறும்பானது மணிக்கு 720 அடி ஊருகின்றது

தொகுப்பு:- க. வாணிமுகுந்தன்,
ஹாட்லிக் கல்லூரி.

### மேலும் சில தகவல்கள்

★ தமிழிலே முதன் முதலாக 'விருத்தப்பா' என்ற செய்யுள் வகையிலே பாடப்பட்ட பெரும் காப்பியம்:
'சீவகசிந்தாமணி' ஆகும்.

★ தமிழிலே 'ஐந்திலக்கணம்' என்று கூறப்படுபவை:
எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

★ விண்வெளியிலிருந்து முதன் முதலாக பூமியைப் படமெடுத்த செயற்கைக்கோள்

1959 இல் அமெரிக்கா செலுத்திய 'எக்ஸ்புளோரர் - 6' ஆகும்.

★ 'ஒரு தலைமுறை' என்பதைக் குறிப்பது:

33 ஆண்டுகளாகும்.

★ 'தனியாகச் செல்லும் மனிதன் எங்கும் அதிவேகமாக முன்னேறுகிறான்' என்று கூறியவர்:

நெப்போலியன்.

★ 'பூமி தினம்' ஆக, ஏப்ரல் 22 ந் திகதி முதன் முதல் கொண்டாடப்பட்டது:

'1970 ஆம் ஆண்டில் ஆகும்.

★ முதன் முதல் விண்வெளிக்குச் சென்ற இந்தியர்:

'ராஹேஷ் சர்மா' ஆவரர்.

★ உலகிலே அதிகளவிலான 'ஒஸ்கார்' விருதுகளைப் பெற்றவர்:

'வால்ட் டிஸ்னி' ஆவார்.

★ கண்ணிவெடி, 50 கலிபர் துப்பாக்கி என்பன அறிமுகமானது:

2 ம் உலக மகா யுத்தத்தில் ஆகும்.

தொகுப்பு:- துரை. பிரஷாந்தன்,
(ஆண்டு 11'A' யாழ் இந்துக் கல்லூரி)

## தங்கப் பெண் அமுதா

உலக அளவிலான தடகளப் போட்டிகளில் இந்தியாவிற்கு பெருமை தேடித்தந்தவர் தங்கமங்கை எனப்படும் பி. டி. உஷா. இவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த சி. அமுதா மற்றுமொரு தங்கப் பெண்ணாக உருவாகி வருகிறார். ஆம், சீனாவின் டியான்சின் நகரில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஜீனியர் பிரிவில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் - அமுதா. இதற்கு இவர் எடுத்துக் கொண்ட நேரம் - 2 மணி 25 நிமிடம் 4 வினாடிகள் மட்டுமேயாகும்.







# முதலுதவி

— செ. அருட்குமரன் —

முதலுதவி என்றால் காயமடைந்த அல்லது நோய்வாய்ப்பட்ட ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்முன் அங்கவீனமோ அல்லது உயிர்ச்சேதமோ ஏற்படா வண்ணம் சூழலில் உள்ள தேவையான பொருட்களைக் கொண்டு ஆற்றப்படும் சேவை (உதவி) முதல் உதவி எனப்படும்.

இக்காலம் ஓர் போர் மேகம் சூழ்ந்த காலம். ஆகையால் நாம் அனைவரும் நம்மை நாமே பாதுகாக்க வேண்டும்.

## அதிர்ச்சி

உடம்பின் சுறுசுறுப்பு திடீரென தளர்ச்சி ஏற்பட்டு உடல் வலுவற்று இருப்பது அதிர்ச்சி எனப்படும்.

### இதன் அறிகுறி:

(1) மயக்கமும் களைப்பும் ஏற்படும்
(2) குளிர்ந்து போதல்
(3) தோல் பிசுபிசுத்தல்
(4) குமட்டல்
(5) வாந்தி எடுத்தல்
(6) நினைவு இழத்தல்
போன்றவையாகும்.

### அதிர்ச்சிக்குரிய சிகிச்சைகள்:

1. நோயாளியின் கலக்கத்தை நீக்கி தைரியப்படுத்தல்.
2. மேல்நோக்கி படுக்கவைத்து தலையை தாழ்த்தி வைக்கவும்.
3. அடிவயிறு, தலை, மார்பில் காயம் இருப்பின் தலையையும் தோளையும் உயர்த்தி அணை கொடுக்கவும்.
4. நோயாளி வாந்தி எடுப்பின் அல்லது சுவாசிக்க கஷ்டப்படின் நினைவை மீளும் நிலையில் படுக்கவைத்தல்.
5. கழுத்து, மார்பு, இடுப்பு ஆகியவற்றை சுற்றியுள்ள உடைகளை தளர்த்தி விடல்.
6. போர்வையால் போர்த்தி வைக்கவும்.
7. நோயாளிக்கு தாகம் இருந்தால் பானங்களை (மது பானம் தவிர்ந்து) சிறிது சிறிதாக குடிக்கக் கொடுக்கலாம்.

''சிந்திப்போம் செயல்படுவோம்
சந்திக்கும் சவால்களை எதிர்கொள்வோம்''

## எய்ட்ஸ் பத்து வருடங்களின் பின்

இந் நோய் ஓர் அபாயகரமான நோய் என்று கண்டறியப்பட்டு பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி தற்போது உலகில் 25 இலட்சம் மக்கள் எயிட்ஸால் பீடிக்கப்பட்டுள்ளனர். 1·3 கோடி பேர் எய்ட்ஸ் வைரசின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். எயிட்ஸ் குறித்த ஆய்விற்காக பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகின்றது. என்றாலும் 1993 யூன் 7 - 12 வரை நடைபெற்ற ஒன்பதாவது சர்வதேச எயிட்ஸ் மகாநாட்டில் பங்கு பற்றிய அறிவியலறிஞர்களில் எவருக்கும் எயிட்ஸ்க்கான ஒரு மருந்தை குறிப்பிட இயலவில்லை. இதுவே தற்போதைய நிலை. இந்த எயிட்ஸ் வைரசு மனித எதிர்ப்பு சக்தியை செயலற்றதாக்கி விடக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் உடலுறவே எய்ட்ஸ் பரவலின் முதன்மைக் காரணியாகும். தவிர இரத்தமாற்று, ஒரே ஊசியை பலருக்கும் பயன்படுத்தல் போன்ற வழிகளிலும் எய்ட்ஸ் பரவுகிறது. கொள்ளை நோயாக இருந்த போதிலும் இன்னமும் எய்ட்ஸ் உயிர்கொல்லி நோய்களில் முதலிடம் வகிக்கவில்லை. தற்போதைய கணக்கின்படி உலகளவில் வருடத்திற்கு ஒரு இலட்சம்பேர் எய்ட்ஸால் உயிரிழக்கின்றனர். ஆனால் மலேரியாவால் 10 இலட்சமும், வயிற்றுப் போக்கால் 40 இலட்சமும், இதய சம்பந்தமான நோயால் 12 கோடியும் உயிரிழக்கின்றனர்.

என்றாலும் மிக வேகமாகப் பரந்து வரும் எய்ட்ஸ், மனித குலத்திற்கு ஒரு மிகப்பெரும் அச்சுறுத்தலாகும். இந்த நூற்றாண்டு இறுதிக்குள் சுமார் 4 கோடி பேர் எய்ட்ஸால் பீடிக்கப்படக்கூடும் என எதிர்பார்ப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 80 சதவிகிதம் வளரும் நாடுகளைச் சார்ந்தவர்களே. என்றாலும் ஓரின உறவு மலிந்துள்ள அமெரிக்காவில் இதன் பரவல் அதிகரித்து வருகிறது. பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாண்மையோர் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பெண்களிடமிருந்து அவர்தம் குழந்தைகளுக்கும் இது பரவுகிறது.


உலகளவில் இந்நோயானது அதிகமான அளவில் சகாரா துணைக்கண்ட ஆபிரிக்க நாடுகளில் 8 மில்லியனுக்கும் மேல் பரவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: 1994 - மனோரமா இயர்புக்



— செ. அ. குமரன் —

# புதிர்

1. 

மேலே மூன்று பெட்டிகள் உண்டு. அவற்றில் எவையேனும் இரு கோடுகளை மட்டும் எடுத்து இரு பெட்டிகள் ஆக்குங்கள் பார்க்கலாம்?

2. உங்கள் வீட்டுத் தோட்டக் காணிக்குள் 8 பூசணிக்கன்றுகள் உள்ளன. ஒருநாள் நீங்கள் அவற்றிற்கு நீர் பாச்சும்போது 7 கன்றில் (ஒரு கன்றில் 5 பூசணிக்காய் வீதம்) 35 பூசணிக்காய்கள் இருந்தன. எட்டாவது கன்றில் பிஞ்சு காணப்பட்டதாயின் உங்கள் தோட்டத்தில் எத்தனை பூசணிக்காய்கள் உள்ளன?

விடையை பக்கம் 23 ஐப் பார்க்கவும்......

## சென்ற இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ய | ப் | 2 பா | ன் | 3 சை |
| ★★★ | 4 நோ | ஸ் | 5 சீ | னா |
| 6 எ | ர் | க | ன | ★★★ |
| த | வே | ல் | ர் | 7 யா |
| ன் | 8 ப | ர | டே | இ |
| ஸ் | ★★★ | 9 து | பொ | ந் |
| 10 ட் | போ | த | ர | இ |

தயாரிப்பு: S. ரமேஸ்
அல்வாய்.

இடமிருந்து வலம்:
1) யப்பான்
5) சீனா
8) பரடே
9) பொந்து
10) இரதபோட்

மேலிருந்து கீழ்
2) பாஸ்கல்
3) சைனா
4) நோர்வே
5) சீனர்
6) எதன்ஸ்
7) இந்தியா

எவரும் சரியான விடையை எழுதவில்லை என்பதை அறியத் தருகின்றோம். — ஆசிரியர் —

# ❋ புதிய கலாச்சாரங்கள் ❋

— துணைவியூர் கேசவன் —

மதியவேளை, வீதிகளின் சந்தடி சற்றே தணிந்திருந்தது. பல களைத்த முகங்கள், அவற்றிற்குரிய மனிதர்கள் வலிந்து தமது 'மிதிவண்டிகளை' மிதித்தார்கள். இடையிடையே சென்றுகொண்டிருந்த மோட்டார் வாகனங்கள் சூழல் மாசிற்கு தமது அதிக பங்களிப்பைச் செய்து கொண்டிருந்தன. தார்றோட் என்ற பெயரில் குன்றும் குழியுமாயிருந்த அந்த வீதியால் நானும் எனது வண்டியை மிதித்துக் கொண்டிருக்கிறேன்.

கடந்த மாதங்களில் பெய்த கடும் மழைக்கு ஈடாக வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. காலையில் வயிற்றுக்குள் போட்டுக் கொண்ட 'காறாத்தல் பாண்' காலியாகியிருந்ததால், வயிறும் தொந்தரவு செய்யத் தொடங்கியிருந்தது. மனத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம் இறங்கிக் கொள்வதற்காய் மனம் சுமை தாங்கி ஒன்றை தேடிக்கொண்டிருந்தது. கால்கள் விருப்பமில்லாமலே மிதித்துக்கொண்டிருந்தன. 'சைக்கிளோ அழுதபடியே' பயணித்துக் கொண்டிருந்தது; ...கிறீச்...... கிறீச்......

ஒரு வாரகாலமாக என்ர மூன்றாவது மகனுக்கு திறம் பள்ளிக்கூடமொன்றில 'அட்மிசன்' எடுக்க வேணுமெண்டு ஓடித்திரியிறன். ஆனா பிரயோசனமில்லைப் போலத்தான் கிடக்கு. 'என்ரபொடி' பாவம் ஸ்கொலஷிப் பாஸ் பண்ணியும்......!

இந்தக்காலத்தில் ஸ்கொலஷிப் எண்டாப்போல இலேசுப்பட்ட விஷயமே அதற்கும் எத்தனை 'டியூஷன்கள்' எத்தனை 'சிவராத்திரி'யான இரவுகள். பாவம், அவன் பட்டபாடு எனக்கும், மனிசிக்கும்தான் தெரியும். இவன் மட்டும் அல்ல எல்லாப் பிள்ளையளும் இப்படித்தான் சோதனை பாஸ் பண்ணுதுகள்.

பத்து வயதில, பன்னிரண்டு மணிவரையும் கண்விழித்துப் படித்து, விடியக்காலத்தால எழும்பி 'புத்தகம் கொப்பியோட' மாயிற புதிய கலாசாரங்களைத்தான் அதுகள் விரும்பியோ, விரும்பாமலோ பின்பற்ற வேண்டியிருக்குது. துள்ளித்திரிந்து ஓடி விளையாடுகிற இனிய மாலை வேளையில் எங்கட பிள்ளையள் 'டியூசனுக்கு' ஓடுதுகள். விளையாட்டில போட்டி போடுறதுக்குப் பதிலா கல்வியில போட்டி போடுதுகள். இண்டைக்கு இந்த நாட்டில வாழ்க்கையே போட்டியாகிப் போனதால, பல வேளைகளில் எங்கள் மத்தியில் மானுடம் தோத்துப் போகுது.



சரிதான், எப்படியோ 'என்ர பொடி', சோதனை 'பாஸ்' பண்ணிட்டுது. ஆனா – அவனுக்கு அரசாங்கம் கொடுக்கிற உதவித் தொகை கிடைக்கப் போறதில்லை. ஏனெண்டா நானொரு 'கவுண்மென்ற் சேவன்ற்' எங்கயோ ஒரு 'சேவன்ற்' தான். மாத வரும்படி இரண்டாயிரத்து முந்நூறு. ஆனா – உவர் 'சிவத்தாற்ற பொடிக்கு' உதவித்தொகை கிடைக்கும்...... அவரென்ன ஒரு வியாபாரிதானே; மாத வரும்படி ஐயாயிரத்திற்கு குறையாது.

அதுதான் போகட்டும். அவன் பட்ட கஷ்டத்திற்கு ஒரு 'திறம்' பள்ளிக்கூடத்தில எண்டாலும் சேர்த்து விடுவமெண்டால்......! அவனொரு கெட்டிக்காரப் பொடியன், நல்லதொரு இடத்தில சேர்த்து விட்டால் நல்லா வந்திடுவான் என்ற எண்ணத்திலதான் இந்த முயற்சியல நான் கால்வைச்சன். அட்மிஷனுக்கு பிரச்சினை இல்லை. ஆனா – 'அபிவிருத்தி நிதி'க்கு நான் எங்க போக...! ஐயாயிரம், நாலாயிரம், மூவாயிரம்....... என அந்த அரசாங்கப் பாடசாலைகளின் 'தரத்திற்கு......' 'திறத்திற்கு' ஏற்றாற்போல 'ரேட்' வேறுபடும் புதிய கலாசாரம் மேடையேறும்போது என் போன்ற பெற்றோர்கள் என்ன செய்யலாம்?

பிள்ளையளைப் படிப்பிக்கிறதெண்டா சும்மாவே. கொப்பிக்கும், பேனைக்கும், டியூசனுக்கும், இன்னும் உடுபுடைவைக்குமெண்டு காசு காசா இறைக்கிறம், அதோட பள்ளிக்கூடங்களுக்கும் 'அபிவிருத்தி நிதியெண்டு, ஆயிரக்கணக்கில கொடுக்கிறதெண்டா 'இலவசக் கல்வி'யின்ரை அர்த்தமென்ன?

வேதனைகள் மனத்தைச் சிறையிட, கஷ்டப்பட்டுப் பெற்ற வெற்றியில் திளைத்திருந்த என் மகனின் முகம் ஏமாற்றத்தில் சிதைந்து போகும் நினைவு என் மனத்தில் திரையிட, என் ஆற்றாமை இதயத்தை கசக்கிப் பிழிவதாய் உணர, எங்கோ, எதிலோ ஏற்பட்ட ஆத்திரம் உடலை படபடக்க வைக்க 'சைக்கிள்' தன் பாதையில் நகர்கிறது.

தெருவோரத்து 'ரீக்கடை' யொன்றில் ஒலிபரப்பாகிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியறிக்கை என் செவிப்பறையில் முட்டி எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது. 'எம் நாட்டில் நடைமுறையில் உள்ள இலவசக் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார், ஏழைகளும் கல்வியின் உச்சப்பயனைப் பெறவேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.........!

(யாவும் கற்பனையல்ல)

நன்றி: மாற்றம்

உ

''நீதிமன்றங்களாலோ, தண்டனைகளாலோ பிரச்சினைகளை மேலோட்டமாகத் தீர்க்கலாமே தவிர அதனால் ஏற்பட்ட வடுக்களை ஒரு போதும் தீர்க்க முடியாது''

# பிரச்சினைகளும் தீர்வுகளும்

பிரச்சினை என்பது எமது உடன் பிறப்பு. எமக்கு எது இல்லாவிட்டாலும் பிரச்சினைகள் இல்லாத நாள் இல்லை, இல்லவே இல்லை. ஒட்டுண்ணிபோல் எப்படியோ பிரச்சினைகள் எம்மோடு சேர்ந்து கொண்டு எமது ஆற்றலின் சாரத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. வாழ்வின் அமைதியான போக்கினை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மாற்றுவதில் பிரச்சினைகள் தமது அளப்பரிய பங்கினைச் செலுத்துகின்றன. அதாவது 'மாற்றம்' ஏற்படுத்தும் ஒரு காரணியாகவே பிரச்சினை உள்ளது. பிரச்சினை ஒன்றினால் வாழ்க்கை நெறி தவறிப் போகாமல் இருக்க அப்பிரச்சினையைச் சமாளித்துக் கடந்து இயல்பாகவே வழி நடக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியே இக் கட்டுரை எடுத்துக் கூறும்.

பிரச்சினை ஒன்றை நாம் சந்திக்கும் போது தடுமாற்றம், பயம், கோபம், பதற்றம் போன்ற உணர்ச்சிகள் எழுவதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் கண்டிருப்போம். மனிதன் நாகரீகத்தில் எவ்வளவோ முன்னேறி விட்டான் எனக் கூறப்பட்டிருந்தாலும் அவனுக்கு இன்னும் உடல், உளரீதியான பிரச்சினைகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. பசி, தாகம், நோய், பாதுகாப்பு என்பவை உடல்ரீதியான பிரச்சினைகளுக்குக் காரணமாகின்றன. இவைகளைச் சமாளிப்பதில் உலகில் வாழும் அரைப்பங்கினர் வெற்றிகண்டிருந்த போதும் ஏனையோருக்கு இவைகள் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. இப்பிரச்சினைகளைப் பூண்டோடு இல்லாமற் செய்ய எவராலும் எக்காலத்திலும் முடியாது. உடம்பு நிரந்தரமான ஒன்றல்ல. அது தொடர்ச்சியாக மாற்றத்திற்கு உட்படும் ஒரு வஸ்துவாக உள்ளமையால் இப்பிரச்சினைகள் எவ்வாறோ இருந்தே தீரும். விஞ்ஞானத்தின் அளப்பரிய முன்னேற்றம் உடல்ரீதியான பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து தீர்வுகள் கண்டுள்ள போதிலும் அத்தீர்வுகளால் நிரந்தரமாக அப்பிரச்சினையை தீர்த்துவிட இயலாமல்தான் உள்ளது. உளரீதியான பிரச்சினையோ அதைவிட ஆழமாகவும், நீளமாகவும் உள்ளது. மனோ தத்துவ நிபுணர்கள் உளரீதியான பிரச்சினைகளுக்கு எவ்வாறு பரிகாரம் காணலாம் என்பதையே தங்கள் பிரச்சினையாகக் கொண்டு ஆராய்கிறார்கள்.



அந்த ஆராய்ச்சி முடிவின்றித் தொடர்கதையாகவே போய்க்கொண்டிருக்கின்றது. 'உள்ளம்' என்பது ஆழம் கண்டு பிடிக்க முடியாத ஒரு நுண்பொருள் என்பதனால்தான் முடிவில்லாத ஒரு ஆராய்ச்சியாக உளவியல் உள்ளது. உள்ளத்தில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே சமயங்கள், தத்துவங்கள், கோட்பாடுகள் என்பன முயன்று வருகின்றன. இந்த முயற்சி மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை இடையீடின்றித் தொடர்ந்து கொண்டே வருகின்றது. ஆனால் 'ஒன்றை நீக்கின் அது ஒழிந்திட்டின் னொன்றாம்' என்பது போல புதிய புதிய பிரச்சினைகள் தோன்றி உள்ளத்தைக் குடைந்து வாட்டி எடுக்கின்றன. சோதிடம், மாந்திரீகம் அருள்வாக்குக் கேட்டல் என்பவை மூலமும் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் துடிப்பதைக் காணலாம். ஆனால் அவற்றினால் பரிகாரம் தற்காலிகமானதே. பிரச்சினைகள் சிரஞ்சீவியாகவே உள்ளமையால் பிரச்சினைகளை வைத்தே பணம் சேர்ப்போர் எங்கும் உள்ளனர். பிரச்சினை உள்ளவர்கள் அநேகராக எப்போதும் இருந்து தங்கள் பணப் பெட்டியை நிரப்பிக் கொள்ள வழி செய்யவேண்டும் என்பதே அவர்களுக்குள்ள பிரச்சினையாகும்.

ஒரு காலத்தில் சில முனிவர்கள், ரிஷிகள் என்போர் தங்களுக்கு உலக மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தடையாக உள்ளன எனக் கருதிக்கொண்டு அவர்களின் தொடர்பினை அறுத்துக் கொண்டு காடுகளிலும், மலைக் குகைகளிலும் சென்று தங்கித்தனியாக வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இப்போதும் கூடச் சிலர் இவ்வாறு இருப்பதாக அறியப்படுகிறது. எனினும் இது ஒருவகைச் சுயநலமான போக்கேயாகும். மக்களின் பிரச்சினையை மக்கள் நடுவில் இருந்து தீர்க்கவல்ல மாதவ யோகிகளே – மாமனிதர்களே எமக்கு இன்று தேவைப்படுகிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதன் மூலவேர் எதுவரை ஓடியிருக்கிறது என்பதை அறிய வேண்டியது அவசியம். அதைச் சரியாக அறிய முடியுமானால் மாத்திரமே தீர்வுக்கு ஒரு வழி காணலாம். மூலவேரை விட்டுப் பக்கவேர்களை மட்டும் கண்டு விட்டு பிரச்சினையைத் தீர்க்கப்புறப்பட்டால் இருக்கிற பிரச்சினையை இன்னும் பெருப்பித்து விட்டுச் சிக்கலாக்குவதே அதன் பலனாக இருக்கும்.

பிரச்சினை ஏற்படுவதற்குச் சாதாரணமாக பிறரையே குற்றம் சாட்டுதல் இயல்பாக உள்ளது. நவீன உளவியல் ஆராய்ச்சியானது, பிரச்சினைகள் பிறரால் விளைவது இல்லை. தன்னால் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளப்படுகிறது என்றே கண்டுபிடித்திருக்கிறது. இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களை அறிந்தோ, அறியாமலோ பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்வதால் அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சமூகப் பிரச்சினையாக, இனப்பிரச்சினையாக, நாட்டுப்

பிரச்சினையாக, தேசப் பிரச்சினையாக, ஏன் உலகப் பிரச்சினையாகவே பரிணமித்து விடுகின்றன. இதைப் புரிந்து கொள்வது இலகுவானது அல்ல எனினும் எல்லா உண்மைகளையும் புரிந்து கொள்வது கடினமாக இருப்பது போலவே இதுவும் —என்பது உண்மையாகும்.

ஒருவருடைய தனிவாழ்க்கையிலோ, குடும்ப வாழ்க்கையிலோ பிரச்சினை ஏற்படும் பொழுது ஒருபோதும் மனங்குழம்பிவிடக் கூடாது. குழப்பமில்லாத, அமைதியான, நடுநிலை உணர்வுகொண்ட மனத்தினாற்றான் பிரச்சினை ஒன்றின் ஆழ அகலத்தையும், ஆணிவேரையும் கண்டுபிடிக்க முடியும். ஒவ்வொரு செயலையும் செய்யும் போது அச்செயலை ஏன் செய்கின்றோம் என்று சிந்தித்துச் செய்ய வேண்டும். நாம் செய்யும் செயலின் பின்விளைவுகள் எவை – அதனால் ஏற்படும் பிரச்சினைகள் எவை என்ற விழிப்புணர்வோடு நிதானமாக செயலில் இறங்கவேண்டும். தன்னம்பிக்கையையும் துணிவையும், தைரியத்தையும் மனதில் வளர்த்துக்கொண்டாற்றான் பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை எதிர்கொண்டு சமாளிக்க முடியும். பிரச்சினையைக் கண்டு ஓடி ஒதுங்குவதோ, நடுங்குவதோ ஆகாது. உணர்ச்சிக்கு மட்டுமே அடிமைப்பட்டு அறிவுக்கு இடங்கொடாதவருக்குப் பிரச்சினையின் உட் சொரூபத்தைக் காணமுடியாமல் போகும்,

ஒவ்வொருவருக்கும் உள்ள பிரச்சினையானது அவரவரின் குடும்பப் பின்னணி, சூழல், பிரச்சினை ஏற்பட்ட காலம், இடம், அவரின் மனப்பாங்கு என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் பிரச்சினையின் பரிமாணம் வெவ்வேறு அளவினதாயிருக்கும். அதனாற்றான் ஒருவரின் பிரச்சினையை வேறு ஒருவர் முற்றிலும் தீர்த்து வைக்க முடியாதுள்ளது. விவேகமும், புத்திபூர்வமான தெளிவான சரியான அணுகுமுறையையும் தன் எல்லாச் செயல்களிலும் கடைப்பிடிக்கும் ஒருவருக்கே பிரச்சினையைத் திறமையாக எதிர் கொண்டு வெற்றி கொள்ளும் திறனிருக்கும்.

பிரச்சினைகளைத் தங்களுக்குள் தீர்த்து உடன்பாடு காணமுடியாதவர்கள் நவீன சட்டங்களின் அடிப்படையில் அமைந்த நீதிமன்றங்களை நாடி வழக்காடி ஏதோ ஒரு வகையில் தீர்த்துக் கொள்வது வழமையாயினும் இரு தரப்பினரும் பெரும்பாலும் மீண்டும் ஒன்று சேர்ந்து முனபோல் இணக்கமாய் வாழமுடியாத படியே தீர்ப்புக்கள் அமைந்துவிடுகின்றன. பிரச்சினை ஏற்பட்டபோது இருதரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மனக்கசப்பு அழியாமல் அப்படியே இருந்து விடுகிறது. இதனால் எவ்வளவு சரியான நீதிமன்றத்தீர்ப்பே ஆயினும்




அதனால் பிரச்சினை முற்றாகத் தீர்ந்துவிட்ட மன அமைதி கிடைப்பதில்லை. எனவே நீதிமன்றங்களாலோ, தண்டனைகளாலோ பிரச்சினைகளை மேலோட்டமாகத் தீர்க்கலாமே தவிர அதனால் ஏற்பட்ட வடுக்களை ஒரு போதும் தீர்க்க முடியாது. அன்பு, கருணை, இரக்கம், மனிதாபிமானம், பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல் ஆகிய மேலான பண்புகளைக் கடைப்பிடித்து நடப்பவர்க்குப் பிரச்சினைகள் வந்தாலும் அவை அவர்களது மனத்தின் நடுநிலையைப் பாதிக்கும் அளவுக்கு வலிமையுடையனவாய் இருக்காது. அவர்கள் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினையையே படிக்கல்லாகக் கொண்டு முன்னேறி வெற்றிகரமான தீர்வினை எட்டிவிடுவார்கள்.

> "தனியொருவர் பிரச்சினை, தனியொருவருக்காகத் தனியொருவராலேயே தீர்க்கப்பட வேண்டியதாகுமேயன்றிப் பிறரால் தீர்க்கப்பட வேண்டியதொன்றன்று. பிறர் கண்கொண்டு தமது பிரச்சினையைத் தீர்க்குமுனைவர், தமது பிரச்சினையைத் தாமே பாரார்' ஆதலால் அவரால் அவர் பிரச்சினை தீர்த்தற்கரியதாம்."
>
> உலக சத்குருவப் பேராசிரியர்
> ஜே. கிருஷ்ணமூர்த்தி.

நன்றி: மாற்றம்.

புதிருக்கான விடை......

1. 

2. 35 காய்கள், ஏனெனில் 8-வது கன்றில் பிஞ்சு தான் பிடித்து இருந்தது. அது காயல்ல.

புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியமும் கரவை கலை இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய விஞ்ஞான விநாடி வினாப் போட்டி விழா யா/வட இந்து மகளிர் கல்லூரியில் 20 – 02 – 1994 காலை 10 மணியளவில் நடைபெற்றது. இவ் விழா நிகழ்வைத் தொகுத்துத் தருகின்றார் எஸ். சுபசீலன் அவர்கள்.

— ஆசிரியர் —

# விஞ்ஞான விநாடி - வினாப் போட்டி 1994

வடமராட்சிப் பகுதி மாணவர்களின் விஞ்ஞான அறிவு மேம்பாடுபற்றி பலரும் இன்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்த வகையில் பாலர் முதல் பெரியோர் வரை அவர்களது அறிவு மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் விநாயகர் தரும நிதிய நிறுவனர் அவர்கள் இம்முறை விஞ்ஞானத்துறையில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதன் விளைவு தான் இந்த விஞ்ஞான விநாடி வினாப் போட்டி. இப்போட்டிக்கான சில ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொறுப்பை இளைய தலைமுறையைச் சேர்ந்த எம்மிடம் நிறுவனர் ஒப்படைத்தார். தமிழீழ கல்விக்கழகம், பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி ஆகிய கல்விக் கோட்டங்களின் அனுசரணையுடன் வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளில் க. பொ. த. சா/தர, உ.தர வகுப்புக்களைக் கொண்ட 42 பாடசாலைகளிற்கு மேற்படி போட்டிக்கு பங்குபற்றுமாறு அழைப்பு விடுத்தோம். சில பிரபல பாடசாலைகள் உட்பட 14 பாடசாலைகள் எமக்கு விண்ணப்பித்திருந்தன.

★ எஸ் சுபசீலன் ★

அவற்றிலும் 8 பாடசாலைகளே போட்டி தினத்தன்று சமூகம் தந்தன. இது குறித்து எமது நிலைப்பாட்டில், அதாவது உற்சாகத்தில் ஓர் தளர்வு காணப்பட்டது என்பது என்னவோ உண்மைதான். இருப்பினும் சில பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களைப் போட்டிக்கு அனுப்பியது மட்டுமல்லாது தாமும் கூடவே வந்து மாணவர்களையும் எம்மையும் உற்சாகமூட்டினார்கள். அவர்களிற்கு எமது பேனாக்கள் என்றும் வாழ்த்துக் கூறும்.

போட்டியின் நடுவர்களாகப் பங்குபற்றியோர்கள் விஞ்ஞானத் துறையின் வல்லுனர்களே. அவர்களில் போட்டியின் தகுதி வாய்ந்த அதிகாரியாக திரு. விவேக் அவர்கள் பங்குபற்றினார். இவர் 'சாளரம்' இதழ் ஆசிரியராவார். இவரே வினாக்களைத் தொகுத்து எமக்களித்தார். திரு. இரா. சந்திரசேகரசர்மா அவர்கள் அவற்றை மீள்பார்வைக்குட்படுத்தினார். இவர் போருட் நிறுவன அதிகாரியும், இளைப்பாறிய விஞ்ஞான சேவைக்கால ஆலோசகர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களுடன் விஞ்ஞானத்துறையில் ஈடுபாடு காட்டிவருபவரும், வளர்ந்துவரும் அறிவியல் துறைசார்ந்த எழுத்தாளருமாகிய திரு தி. தவபாலன் அவர்களும் கலந்து கொண்டார்.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளிற்கும் தலைவராக வடமராட்சிக் கோட்ட அரசியல் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் திரு. மு. பாரிமகன் அவர்கள் செயற்பட்டு நெறிப்படுத்தினார்.

வினாக்களின் தரம் இரசிகர்களின் அளவு கோலின் மூலம் ''கடினமாகத் தென்பட்ட போதும் சில கேள்விகள் போட்டியின் போதும், பின்னரும் பலராலும் பேசப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்'' உதாரணமாக ''சுப்பர் சொனிக் விமானத்திற்கு பாவிக்கப்படும் எரிபொருள் என்ன? என்பதும் மண்ணெண்ணையே'' அதற்குரிய விடை என்பதை அறிந்த போதும் பலரும் வியப்புடனும் ஆர்வத்துடனும் அதனைப் பற்றிக் கிசுகிசுத்ததையும் காணக் கூடியதாக இருந்தது. காட்லிக்கல்லூரி வெற்றி விருதைப் பிற்பகல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது வடமராட்சி தெற்கு – மேற்கு, பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டது.

## சுயஸ் கால்வாய்

மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் 173 கி. மீ. நீர்ப்பாறைதான் சுயஸ் கால்வாய் ஆகும். இக்கால்வாயை ஆழமாக்கும் பணியில் யப்பான் – பெல்ஜிய நிறுவனம் இப்பணியில் ஈடுபட்டுள்ளன. தற்போதைய நிலையில் சுயஸ் கால்வாயில் 1,70,000 டன் எடையும் 56 அடி நீராழ்வும் கொண்ட கப்பல்கள் செல்ல முடியும். 1956இல் இது தேசிய மயமாக்கப்பட்டதில் இருந்து எகிப்துக்கு இது முக்கிய வருமானம் தரும் இடமாக இருந்து வருகின்றது. 1992 இல் கிடைத்த வருமானம் 186 கோடி டாலராகும். ஆழமாக்கும் பணி நிறைவடைந்தால் மேலும் 5 கோடி டாலர் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அறிவுப் போட்டி — 7

1) இந்த ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை என்ன ஆண்டெனப் பிரகடனப் படுத்தியுள்ளது?

2) நாம் குமுதினிப் படுகொலை, வல்வைப் படுகொலை, கொக்கட்டிச் சோலைப் படுகொலை எனப் பலவற்றை எதிர் கொண்டுள்ளோம், அதுபோல அண்மையில் உலகில் ஒரு முக்கியத்துவம் மிக்க படுகொலை நடந்தது. அது என்ன பெயரால் கூறப்படுகிறது?

3) வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பலோட்டிய தமிழர்கள் ஐவரில் எஞ்சியிருந்த இரத்தினசபாபதி அண்மையில் மறைந்து விட்டார். அவர்கள் சென்ற கலத்தின் பெயரென்ன? இது தொடர்பில் வெளிவந்த நூலை எழுதியவர் யார்? அந்நூலெது?

4) பல்கலைப் புலவர் குலரத்தினம் அண்மையில் மறைந்துள்ளார். அவருக்கு இப்பட்டத்தை அளித்தவர் யார்? அவர் கௌரவ ஆசிரியராய் இருக்க வெளிவந்த இதழ் எது?

5) 'இலங்கை ஒரு தீவு. அதில் இரு நாடு' என்ற கருத்துடன் கவிதை எழுதியவர் யார்?

6) நாம் தமிழென நம்புபவை பல தமிழல்ல. இங்கே பத்து தமிழல்லாத சொற்களைத் தருகிறோம்; அவற்றைத் தமிழில் எழுதுங்கள்.

   பிரச்சாரம், இதயம், அனுஸ்டித்தல், விஷமம், சந்தோஷம், வருடம், தினம்.

7) பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலை நாட்டிய தமிழ்ச் சிறுவன் யார்? அவனது வயது என்ன?

8) திருவள்ளுவர் ஆண்டு எப்போது பிறக்கிறது? இப்போது எத்தனையாம ஆண்டு?

9) செய்யும் கருமத்திலே தளராத ஊக்கமுடைமையே செல்வத்திற்கு அழகாகும் என்ற கருத்தைக் குறித்து நிற்கும் ஔவையாரின் பாவைத் தருக?

10) ஏவாமல் குறிப்பாலறிந்து செய்வோரை ஔவையார் எதற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்?

11) நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.
என்ற பாவின் கருத்தைச் சுருக்கிதருக?

12) தீயாரைப் பற்றி ஔவையார் எவ்வாறு கூறியுள்ளார்?

விடைகளை **31-07-1994**-ம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.





# தாய்மை என்றால்... அன்பு என்று பொருள்

★ தொகுப்பு:- செல்வா ★

நம்மைப் பத்துமாதம் சுமந்து பெற்றவள் தாய். மார்புமீதும் தோள்மீதும் தொட்டிலிலும் தாலாட்டி தன் உதிரத்தை பாலாக்கி எமக்கு ஊட்டி வளர்ப்பவள் தாய். ஆசைப்பட்ட உணவுகளை நமக்காக கட்டுப்படுத்தி பத்தியம் இருந்து எம்மை வளர்ப்பவள் தாய்

தாயை தாய்மை என்கின்றோம். தெய்வம் என்கிறோம். தாயார் இறந்தவுடனேயே பட்டினத்தடிகள் அழுதார். பட்டினத்தாரே நீங்கள் துறவியாயிற்றே நீங்கள் அழலாமா... நாங்கள் எல்லாம் இன்ப துன்பங்களில் கலந்திருப்பவர்கள்... அழுவோம்... சிரிப்போம். நீங்கள் இப்படிச் செய்யலாமா என்று சிலர் அவரைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்குப் பட்டினத்தார்:- அவர் என் தாயார் இல்லை... என் தெய்வம் என்றார்...

எவன் தூங்கி எழுந்தவுடனே அம்மா என்ற தெய்வ சிந்தனையோடு எழுகிறானோ அவன் வாழ்க்கையில் உயர்ந்து, சிறந்து விளங்குவான்

வட்டிலிலும் தொட்டிலிலும்
மார்புமீதும் தோள்மேலும்
கட்டிலிலும், வைத்து
என்னைக் காப்பாற்றி—

என்றார் பட்டினத்தார்... தகப்பனாரா காப்பாற்றினார் தாயல்லவா காப்பாற்றினாள். தாய்மை என்றால் அன்பு என்று பொருள். அன்பு பெண்களுக்கு இயற்கையாகவே உண்டு.

தன் அன்பை எமக்கூட்டி பண்புள்ளவனாய் எம்மை வளர்த்து எமக்குப் பெருமையை சேர்ப்பவள் அவளல்லவா. மனிதனுக்குப் பெருமை எல்லாம் அவனுக்குப் பண்பு வருவதால்தான். அந்தப் பண்பை நன்பாலோடு பாசத்தைக் கலந்து ஊட்டி உலகில் மனிதனாக ஆளாக்குபவள் தாயல்லவா.

மனிதன் நல்ல பண்புகளை உடையவனாய் விளங்க வேண்டும். பிறருக்கு உதவ வேண்டும். இந்த நாட்டுக்கு நன்றி காட்டுகிறாய் என்று அப்போதுதான் பொருள். இதுதான் தாய்க்கும் தாய்நாட்டுக்கும் செலுத்தும் மதிப்பும் கௌரவமுமாகும்.

உ

## ஒழுக்கம் உயர்வைத் தரும்...

ஆசைகளை நம்மால் நிறுத்திவிட முடியாது. அவை வந்து வந்து தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கும். அப்படியானால் பின் எப்படி இதை நீக்குவது.

ஒழுக்கம் என்பதைக் கெடுக்கக் கூடிய இந்தப் பொறிகளால் வருகின்ற துன்பங்களை உன்னால் நிறுத்த முடியாது. ஆனால் அவை தானாகவே உன்னை விட்டுப் போக வேண்டும். எப்படி?... ஒரு இரும்புக் கம்பி இருக்கிறது. அதன் மேல் பூச்சிகள் எல்லாம் வந்து உட்காருகின்றன. பூச்சி, வண்டு, தேள், பாம்பு இவையெல்லாம் ஆசைகள், இவை எல்லாம் மனம் என்னும் கம்பியின் மீது ஒவ்வொன்றாக வந்து உட்கார்ந்து கொள்கின்றன.

ஐயோ இவை எல்லாம் வந்து உட்காருகின்றனவே என்று ஒருவர் தள்ளித் தள்ளி விடுகிறார். தள்ளிவிட அவைகள் ஒன்றுக்கு இரண்டாகவே வந்து உட்காரும். அதற்காக மகான்கள் சொன்னார்கள் அந்த இரும்பு மேலே உட்காருகிற பூச்சிகளை தள்ளிக் கொண்டிருக்காதே அவை போகாது. போனாலும் திரும்ப வந்து உட்கார்ந்து கொள்ளும். அவைகள் தானாகப் போக வேண்டும். அவை தானாகப் போனால் ஒழிய உன்னால் அவைகளை வெளியேற்ற முடியாது. அதற்கு என்ன வழி. மனம் என்னும் இரும்புக் கம்பியை ஒழுக்கம் என்ற நெருப்பிலே புதைப்பாயானால் அந்த ஒழுக்கச் சூடு கம்பியில் ஏறும்போது மனம் என்னும் கம்பியில் சூழ்ந்திருந்த பூச்சிகள், வண்டுகள், தேள், பாம்பு என்ற தீயவை விலகி ஓடிவிடும்.

### ★ பரிசுகளும் விருதுகளும் ★

நோபல்பரிசு உலகத்தில் மிக உயர்ந்த பரிசாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சமாதானம் – இலக்கியம் – இயற்பியல் – வேதியல் – பொருளாதாரம் – மருத்துவம் என்னும் ஆறு துறைகளில் தலைசிறந்தவர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகின்றது. நோபல் பரிசுத் தொகை 1993-இல் 6·7 மில்லியன் குரோனர் (9,05,000 டாலர்) உயர்த்தப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் வரை 6·5 மில்லியன் குரோனராக (8,78,000 டாலராக) இருந்தது.

ஆதாரம்: மனோரமா இயர்புக் – 1994.



உ

## பாலின் நிறம் வெள்ளையாக இருப்பதேன்?

சூரிய ஒளியில் பார்த்தால் பாலும் தயிரும் வெண்நிறமாகவே காணப்படுகிறது. ஆனால் பாலைச் சிவப்பு வெளிச்சத்தில் பார்த்தாலோ, அது சிவப்பாகத் தெரியும். ஆம் பச்சை அல்லது நீல ஒளியில் பால் முறையே பச்சையாகவும், நீலமாகவும் காணப்படும். இது ஏன் தெரியுமா?

வெண்நிறமாகக் காட்சி தரும் சூரிய ஒளி உண்மையில் ஏழு வண்ணங்களின் கலவை என்பதை நாம் அறிவோம். இந்த நிறங்களையும் நீங்கள் அறிவீர்கள். அவை ஊதா (*Violet*), கருநீலம் (*Indigo*), நீலம் (*Blue*), பச்சை (*Green*), மஞ்சள் (*Yellow*), ஆரஞ்சு (*Orange*), சிவப்பு (*Red*) இந்த நிறங்களை ஒரு பட்டகையின் உதவி கொண்டு பிரிக்கலாம். ஒரு பொருள் எந்த நிறத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறதோ, அந்த நிறத்தைக் கொண்டதாக நம் கண்ணுக்குப் புலனாகிறது. பால், தயிர் இவற்றின் மூலக்கூற்று அமைப்பு (*Molecular-Structure*) சூரிய ஒளியின் எந்த நிறத்தையும் தனியாகக் காண்பிக்காமல் அனைத்து நிறங்களையும் ஒருங்கே பிரதிபலிக்கச் செய்கிறது. அதனால் தான் பாலும், தயிரும் வெண்நிறமாகக் காணப்படுகிறது. பாலையும், தயிரையும் செந்நிற ஒளியில் பார்த்தால், சிவப்பாகத் தெரியும். ஏனெனில், அவை சிவப்பு நிறத்தை எதிரொளிக்கின்றன (*Reflect*). இந்த உண்மை எல்லாப் பொருளுக்கும் பொருந்தும். எப்பொருள் எந்த நிறத்தை எதிரொளிக்கச் செய்கிறதோ அப்பொருள் அந்த நிறத்தைக் கொண்டதாக நம் கண்ணுக்குத் தெரிகிறது.

—தொகுப்பு: சு. ஜெயலட்சுமி.

### உலகநாடுகள் — பெரிய நாடுகள் நிலப்பரப்பில்

| நாடு | பரப்பு ச. கி. மீ |
|---|---|
| ரஷ்யா | 1,70,75,000 |
| கனடா | 9,976,139 |
| சீனா | 9,561,000 |
| அமெரிக்கா | 9,372,614 |
| பிரேசில் | 8,511,965 |
| அவுஸ்ரேலியா | 7,682,300 |
| இந்தியா | 3,287,263 |
| ஆர்ஜெண்டினா | 2,776,654 |
| அல்ஜீரியா | 2,381,741 |

## மறந்தால் தானே நினைப்பதற்கு

— செவ்வந்தி —

ஓர் ஊரிலே மன்னனும் குடிமக்களும் ரொம்ப சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். மன்னன் குடிமக்கள் மீது விசுவாசத்துடன் நடந்து வந்தான். அதேபோல் குடிமக்களும் மன்னன் மீது விசுவாசம் வைத்திருந்தனர். மன்னன் ஒருமுறை வெளியூர் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு மாளிகையில் மந்திரிமாரும், காவலாளிகளுமே மீதமாயிருந்தனர். மன்னன் வெளியூர் சென்று நாட்கள் பல கழிந்து விட்டன. மக்கள், மந்திரிமார் எல்லோரும் மன்னனைப் பல நாட்களாகக் காணோமே என்று சோகக் கடலில் ஆழ்ந்திருந்தனர். திடீரென ஒருநாள் மன்னன் வருவதாய் செய்தி வந்து சேர்ந்தது. உடனே எல்லோருக்கும் குதூகலம் பொங்கியது. மன்னன் அரண்மனைக்கு பல்லக்கில் பலத்த ஆரவாரிப்புடன் வந்து சேர்கிறார். மந்திரிமார், புலவர்கள் எல்லாரும் மன்னனை மாலைகள் பலசூடி வரவேற்கிறார்கள்.

மன்னன் மாளிகையின் ஆசனத்தில் மகிழ்வோடு வந்து அமர்கிறார். பின் ஒருசில வினாடிகள் சென்றதும் எல்லோரையும் சுகம் விசாரித்து முடிந்ததும், மந்திரிமார் புலவர்கள் அரசனை நோக்கி, மன்னா! இவ்வளவு நாளும் உங்களைக் காணாது தவித்தோம், ஒவ்வொருநாளும் உங்களை நினைத்த வண்ணமே இருந்தோம், இருக்கிறோம் என்றார்கள்.

ஒரு மூலையில் ஒருவர் மட்டும் ஒன்றுமே பேசாது ஏதோ தியானத்தில் நின்றுகொண்டிருந்தார். அரசன் அவரை சற்று உற்று நோக்கினார். அம்மனிதன் சற்றும் அரசனைக் கவனியாது தனது சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். உடனே அரசன் ஏ மனிதா! என்னை எப்பவாகுதல் நினைத்தாயா என்று கேட்டார். அம்மனிதன் அரசனை நோக்கி அரசே! நான் உங்களை ஒருநாளும் நினைத்ததில்லை என்று சொன்னபோது அரசன் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தான். அம்மனிதன் மீண்டும் குரல் எழுப்பினான். அரசே உங்களை ''மறந்தால் தானே'' மீண்டும் நினைப்பதற்கு என்று கூறி எல்லோரையும் ஆச்சரியத்தில் வியக்கச் செய்தான். உடனே மன்னன் அம்மனிதனின் திறமையையும், ஊக்கத்தையும் போற்றிப் பரிசில்கள் வழங்கி அவனை மாளிகையில் தன்னோடே இருக்கும்படி கட்டளையிட்டான். மந்திரிகளுக்கு இல்லாத திறமை இவனுக்கு எப்படி வந்தது என்று எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

— முற்றும் —



## அறிவுப்போட்டி 6 ற்கான விடைகள்

1. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
சிவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை, சிலப்பதிகாரம்.

2. பழமை வாய்ந்த மாமேதை லெனினின் உடலைப் புதைக்கப் போவதாகச் செய்தி வந்ததல்லவா? அவ்வுடல் எவ்வளவு காலம் பாதுகாக்கப்பட்டு வந்தது? லெனின் யார்?
69 வருடங்கள் — ரஷ்யப் புரட்சியின் தந்தை.

3. புறப்பொருள் வெண்பாமாலை ஆராச்சியை எழுதியவர் யார்? அவரது புனை பெயரென்ன?
புலவர் சிவபாத சுந்தரனார் — தொல்புரக் கிழார்.

4. இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப்பரிசு யார் யாருக்கு கிடைத்துள்ளது? அவர்களிருவரும் யாவர்?
நெல்சன் மண்டேலா — ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் தலைவர்
டீ கிளார்க் — தென் கொரிய ஜனாதிபதி.

5. ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற நீச்சல் வீரன் பிறந்த இடம் எது? அவன் எங்கு சாதனை நிலைநாட்டி மரணித்தான்?
வல்வெட்டித்துறை — ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கையில்

6. உலகப் புகழ்பெற்ற மோனலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?
லியனார்டோ டாவின்ஸி.

7. தனியொருவனாக அரும்பொருட்களைச் சேகரித்து வைத்துள்ள பெரியார் யார்? அவருக்கு வழங்கப்பட்ட விருது எது?
கலைஞானி — மாமனிதர்.

8. பூமி வட்டமானது என முதலில் கூறிய கிரேக்க அறிஞர் யார்? சந்திரனின் விட்டம் எவ்வளவு?
ஹெக்காடியஸ் — 2160 மைல்.

9. புவியீர்ப்புக் கொள்கையை கண்டறிந்தவர் யார்? அவர் எங்கு பிறந்தார்?
சேர் ஐசாக் நியூட்டன் — இங்கிலாந்து.

10. மனித உரிமைகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
டிசெம்பர் 10.

11. உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்று சுற்றத்தவரை ஔவையார் எவ்வாறு கூறியுள்ளார்?

உடம்போடு வியாதி எனப்படும் நோய் கூடப்பிறந்து கெடுதல் செய்வது போல் உடன்பிறந்தவர்களும் கெடுதல் செய்வார்கள் என்பதை உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்று சுற்றத்தவரை ஔவையார் கூறியுள்ளார்.

12. ஔவையார் கூறிய நான்கு அற்புதங்கள் எவை?

நிலத்தின் தன்மைக்கேற்ப நீரும், சான்றோர் அவர்களின் குணம் கொடைக் கேற்பவும், கண்கள் அவற்றில் அமைந்த கருணைக் கேற்பவும், கற்போடு விளங்கும் பெண்மையும் நான்கு அற்புதங்களாகும்.

13. இழிந்த செயலைச் செய்வதிலும் பார்க்க உயிர்விடுதல் மேலானது என ஔவையார் கூறிய இழிந்த செயல் எதுவாகும்?

பிச்சை எடுத்தல்.

14. உள்ளத்தில் கள்ளமில்லாதவர்க்கு தருஞ்சிவந்த தாமரையாள் எவை எவையைக் கொடுப்பாள்?

நீர்வளத்தையும், நல்ல வீட்டையும், நெல்விளையும் நிலத்தையும், நல்ல பெயரையும், கீர்த்தியையும், பெருவாழ்வையும், நன்மக்கள் நிறைந்த ஊரையும், செல்வத்தையும், ஆயுளையும்.

15. அறிவில்லாத மாந்தர்க்கு எது கூற்றம் - பொருள் இல்லாத மாந்தர்க்கு எது கூற்றம் - வாழைக்கு எது கூற்றம் - வாழ்க்கைக்கு எது கூற்றம் -

அறிவில்லாத மாந்தர்க்கு அறிஞரது சொல் கூற்றம், பொருளில்லா மாந்தர்க்கு தரும நெறியான கூற்றுக்கள் கூற்றமாகும், வாழைக்கு தான் ஈன்ற குலையே கூற்றமாகும், கணவனின் பணிகளுக்கு இசைந் தொழுகா மனைவியே வாழ்க்கைக்கு கூற்றமாகும்.

16. 1993-ம் ஆண்டின் தேசாபிமானி யார் என்று கேட்டு ஒரு சஞ்சிகை நடாத்திய போட்டியில் விநாயகர் தரும நிதிய நிறுவனர் அவர்களை இவ்வாண்டின் தேசாபிமானியாக தெரிவு செய்துள்ளது. இப்போட்டியை நடாத்திய சஞ்சிகையின் பெயரென்ன?

மாற்றம் சஞ்சிகை.



உ

# சர்வதேச அமைப்புகள்

எமது பிரதேசத்தில் தற்போது செயற்பட்டுவரும் சர்வதேச அமைப்புகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயமும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை பற்றிய சில குறிப்புகளை இங்கே தொகுத்துத் தருகிறார் திரு. பரமேஸ்வரன் அவர்கள்.

— ஆசிரியர் —

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் I. C. R. C.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 1863 ம் ஆண்டு ஒரு தொண்டர் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. 1864 ம் ஆண்டு 12 நாடுகள் ஜெனீவாவில் கூடி ஒப்பமிட்டன. உலகின் பெரும்பாலான நாடுகளில் செஞ்சிலுவைச் சங்க கிளைகள் செயற்படுகின்றன. 1929 ல் கைதிகள் பராமரிப்பும், பாதுகாப்பும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்டது. *League of Red Crasenc Socities* என்ற குழுவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

நடவடிக்கைக் குழுவின் தலைவர், பொதுச் செயற்குழு, இயக்குநர் மூவரும் நடவடிக்கைக் குழுவுக்குத் தலைமை வகிப்பர். இம்மூவரும் இணைந்து ஆண்டுக்கொரு முறை ஜெனீவாவில் கூடி அறிக்கை சமர்ப்பிப்பர். இராணுவம், மருத்துவர்கள், வைத்திய அதிகாரிகள், மதகுருமார், கடலில் காயமுற்றோர், யுத்தக் கைதிகள், பொதுமக்கள் என்போர் யுத்தக் காலங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பராமரிக்கப்படுவர். நடவடிக்கைக் குழு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நடவடிக்கைக்குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைகள் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ளன. தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இயக்குனராக திரு. கொம்மாறுகாவும், கொழும்பு வதிவிடப் பிரதிநிதியாக திரு. டுபோரும், யாழ் வதிவிடப் பிரதிநிதியாக திரு. பெயாட் ஸ்வைகரும் செயற்பட்டு வருகிறார்கள். யாழ் வதிவிடப் பிரதிநிதி பெயாட் ஸ்வைகர் தற்போது தமிழ் பயின்று வருகிறார்.

நன்றி: திரு. பெயாட்ஸ்வைகர்
இ. செ. கி. சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி
ஐரோப்பா ஆண்டு நூல்

## United Nations High Commison of Refugees

### அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம்

அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம் 01 – 01 – 1951 ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் ஜெனீவாவில் உள்ளது. இந்நிறுவனத்தின் தலைவர் ஐ. நா. செயற்குழு மூலம் தெரிவு செய்யப்படுவார். அரசியல், இன, மத பிரச்சினைகளால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியோர் தமது சொந்த இடங்களில் வசிக்க முடியாதோர் அகதிகளாகக் கருதப்படுவர்.

பொருளாதார சமூகக்குழு *Economy and Social Council (Ecosoc)* அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துடன் இணைந்து செயற்படுகிறது, ஆண்டுக்கொருமுறை இவர்கள் ஜெனீவாவில் கூடுகின்றார்கள். உணவு, மருந்து வகைகள் பெருமளவில் தட்டுப்பாடாகவுள்ள இடங்களுக்கு உணவு, மருந்து வகைகளை அனுப்பிவைப்பதும் இவர்களின் நோக்கம்.

அகதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் அகதிளை மீளக்குடியமர்த்தும் பணியிலும் *(ICEM) Inter Governmental Committee for Eyropean Megnation* ஈடுபடுகிறது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்த வரையில் விவசாயக் கடன்களையே கூடுதலாக யு.என்.எச்.சி. ஆர் வழங்கி வருகிறது. அகதிகளை முகாம்களில் தங்கியிருக்காமல் விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுத்தும் பணியிலும் யு. என். எச். சி. ஆர் ஈடுபட்டு வருகிறது.

175 க்கு மேற்பட்ட கிளைகளை இந்நிறுவனம் கொண்டுள்ளது. இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் 1988 ம் ஆண்டு கிளைகள் அமைக்கப்பட்டன. இதன் இயக்குனராக சதீகோ தோட்ட என்ற ஜப்பானிய பெண்மணியும், கொழும்பு வதிவிடப் பிரதிநிதியாக திரு. ஹாசிம் கூர்க்காவும், யாழ் வதிவிடப் பிரதிநிதியாக திரு. அசோக்குமாரும் செயற்பட்டு வருகின்றனர். ஜெனீவா தலைமையக இயக்குநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

நன்றி: திரு. அசோக்குமார்,
யாழ் வதிவிடப் பிரதிநிதி அகதிகளுக்கான
ஐ. நா. தூதரகம் யாழ்ப்பாணம்
ஐரோப்பா ஆண்டு நூல்.



## நன்றாய் விடியும் நாளைப் பொழுது

★★★★★★★★★★★★★★★★★★

மாவுக்கு ஏங்குகின்றோம் மனிதவலுவைத் தேய்க்கின்றோம்
தாவும் மனநிலையால் தடுமாற்றம் கொள்கின்றோம்
குரக்கன் தினை சாமி ஒடியல் இவையும் மாந்தானே
உரக்க ஒலித்தாலும் எனர்காதில் ஏறாதாம் ஏனோ!
கப்பலில் மாவந்தால்தான் அப்பமும் பாணும் சுடுவோம்
சிப்பிக்குள் முத்தாய்ச் சிரிக்கின்ற குரக்கனும் சாமியும் தினையும் ஏனோ
தப்பாய் எம் நினைவைத் தடம் போட்டிழுக்கிறது,
நாவிற்கு சுவை குறைவென்றால் ..
தாவியோடும் மந்தியாய் தடுமாறுதல் முறையாமோ...
கசக்கின்ற மருந்து உடலிற்கு பெருவிருந்து
கசக்கிறதே மருந்தென்று காறி உமிழ்ந்து விட்டால்
நடப்பதென்ன வென்று நான் சொல்லியா தெரிய வேண்டும்
தரிசாக்கிடக்கும் நிலமெல்லாம் குரக்கன் தினை சாமி விதைத்திட்டால்
பரிசாத் தருவாள் பூமியன்னை எம்பழம் பெரும் சொத்தை
அடிமைக்கு வித்திட்ட அன்னியன் விதைத்திட்ட கோதுமை
மடி நிறைந்தாலும் மனம் நிறையா உணவில்லைத் தானே
புரிந்தும் தெரிந்தும் ஏனையா கோதுமை மாவாசை
சரிந்து போகும் வளத்தை நிமிர்த்த சாதனைதான் புரியாயோ
உரித்த கோதுமையில் ஒன்றுமே இல்லை யென்றால்
சிரிப்பாய் இருக்கலாம் இச்சேதி... நாளை
மாஹோா வாதுவையில் மாவராது போனால் என்ன நடக்கும்
வெள்ளம் வரும் முன்னே அணை கட்டுதல் குறையாமோ?
உள்ளம் விசாலமானதுதான் எண்ணம் தான் ஊமையாய்த் தூங்குது
ஆண்டாண்டு காலமாய் எம் அப்பன் பூட்டன் சாதனையை
தோண்டி எடுத்திடுவோம் துயரமெல்லாம் துரத்திடுவோம்
பட்டை துலாப்பூட்டி பயிருக்கு நீர் பாய்ச்சி...
தட்டைப் பயிறு தினை குரக்கன் எங்கும் மாவிற்காய் விதைத்திட்டால்
பெட்டியாய் கடகம் எங்கும் பெருமணிகள் நிறைந்து நிற்கும்
இன்றே எடுப்போம் புதிய சங்கற்பம்
நன்றாய் விடியும் நாளைப் பொழுது.

— ஆக்கம்: செல்வதயாளன் —

# நொடியும் விடையும்

— கோப்பாய் சிவம் —

1) பழமாகிக் காயாகும், காயாகிப் பூவாகும்
2) அடிக்க அடிக்கக் கத்தும், குழைபோடத் தின்னாது
3) வெள்ளைக்காரன் போடுவது மஞ்சள் சட்டை
4) திறந்து திறந்து மூடினாலும் சிறிதும் சத்தம் கேளாது
5) பார்வை இல்லாதவன் பலருக்கு வழி சொல்வான்
6) உருவமின்றி வரும் உன்மனதைக் கெடுக்கும்
7) கோட்டைச் சுவரிலே கொலுவிருப்பாள் முத்தழகி
8) தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள்
9) குழந்தை அழுவதேன்? குப்பை தேங்குவதேன்?
10) உடையப் போகும் வீட்டுக்குள் உயிருள்ள குஞ்சு
11) ஆளில்லா வீட்டுக்கு வாய் பேசாக் காவல்காரன்
12) தினமும் வருவான், புதினம் தருவான்.

卐 卐 卐

★ விடைகள் ★

1) தேங்காய்
2) மேளம்
3) வாழைப்பழம்
4) கண்
5) கைகாட்டி
6) சந்தேகம்
7) மூக்குத்தி
8) பால், தயிர், நெய்
9) எடுப்பாரற்று
10) முட்டை
11) பூட்டு
12) புதினப்பத்திரிகை

## அறிவுப் போட்டி இல. 6-ல் (சு) சரியான விடை எழுதிப் பரிசில் பெறுவோர்

1. துரைராஜா பிரசாந்தன்
44, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் 100/
2. த. சிறினிவாசன்
ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை 100/
3. மு. பொ. கு. முகுந்தன்
அரசடி வீதி, புலோலி கிழக்கு - பருத்தித்துறை. 100/



உ

# மன்னனும் வாய்மையும்

ஒரு நாட்டிலே ராஜா ஒருவர் இருந்தார். நம் நகரத்திற்கு யார் எந்தப் பொருள் விற்பனை செய்யக் கொண்டு வந்தாலும் அந்தப் பொருள் விற்பனையாகாது போனால் இரவோடு இரவாக அதனை விலைக்கு வாங்கி அரண்மனையில் சேர்த்து விடுவார். விற்பனை செய்ய வந்தவர்கள் வெறுங்கையோடு போகப்படாது. பொருள் விற்பனையாகவில்லையே என்று மனம் வருந்தக் கூடாது. அவர்கள் மகிழ்ச்சியோடு திரும்ப வேண்டும் என்பதே மன்னனின் ஆசை.

ஓர் ஏழைக் குடியானவன் அந்த நகரத்திற்கு வந்தான். அவனிடம் நகரப்பெட்டி இருந்தது. அதில் நிறையத் தெருப்புழுதியை நிரப்பி எடுத்துக் கொண்டு விற்பனை செய்ய வந்தான், விற்க முடியவில்லை. இரவு அரண்மனைச் சேவகர் வந்தனர். அவன் விற்கக் கொண்டு வந்த பொருளைக் கேட்டார்கள். இது தெருப்புழுதி. இதன் விலை ஆயிரம் வராகன் என்றான். அரண்மனைக்குப் போய் நடந்த விபரத்தைச் சொன்னார்கள். அவன் நம் நேர்மையை நம்பி வந்தவன். ஆயிரம் வராகன் கொடுத்து அந்த ஓட்டைப் பெட்டியையும், ஒன்றுக்கும் உதவாத தெருப்புழுதியையும் அரண்மனையில் கொண்டுவந்து வைத்து விடுங்கள் என்றான் மன்னன்.

அரசனின் உத்தரவுக்குப் பயந்து வாங்கினார்கள். அரண்மனையில் கொண்டுவந்து வைத்தார்கள். புழுதியை விற்ற ஏழை தன் ஊருக்கு மகிழ்ச்சியுடன் திரும்பினான்.

அன்றிரவு நடுநிசியில் அரசர் எழுந்து பார்த்தார். தன் அரண்மனை வாயில் பக்கம் அழகான பெண் நிற்பதைக் கண்டார். இறங்கிப் போய் 'தாயே' நீ யார்? உனக்கு என்ன கவலையென்று கேட்டார்! என் பெயர் லெட்சுமிதேவி. இந்த அரண்மனைக்குள் வரக்கூடாத குப்பையும், புழுதியும் வந்து விட்டன. நான் இங்கிருந்து வெளியேறுகிறேன் என்றாள் லெட்சுமி.

தேவி! நான் கொடுத்த வாக்குப் பொய்த்துப்போகக் கூடாது எனவே மன்னிக்க வேண்டும். நான் குடியிருக்கமாட்டேன். அரண்மனையில் இருந்து வெளியேறுகின்றேன். இவ்வாறு விடைபெற்று லெட்சுமிதேவி போய்க்கொண்டிருந்தாள். சில விநாடிநேரம் சென்றது

அழகான வாலிபன் ஒருவன் கண்ணைப் பறிக்கும் அழகுடன் அரண்மனை வாசலைக் கடந்தான். தேவா! யார் நீ? நான்தான் தருமத்தின் தேவன். லெட்சுமி வெளியேறிய பிறகு எனக்கு இங்கு வேலையில்லை, போகிறேன். தருமதேவனே! நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினேன். இனி உன் விருப்பம் என்றான் அரசன். தருமத்தின் தேவன் அங்கிருந்து போய்விட்டான்.

இன்னும் சில விநாடிகள் சென்றன. இளம் யுவன் ஒருவன் அங்கிருந்து போவதைக் கண்டான் அரசன். யுவனே! நீ யார்? என் பெயர் நேர்மை. லெட்சுமிதேவியும், தருமதேவனும் போனபின் நான் வாழமுடியாது. இனி உன் விருப்பம் யுவனே என்று அரசன் சும்மா இருந்தான். நேர்மையும் போய்க்கொண்டிருந்தான். அடுத்து கீர்த்தி தேவனும் போய்க்கொண்டிருந்தான்.

அரசன் முன்னால் தள்ளாடிக் கொண்டு பழுத்த பழமாக ஒரு முனிவன் வந்தான். தேவனே! தாங்கள் யார்? அரசனே! இந்த அரண்மனைக்குள் புழுதியை கொண்டு வைத்தாயாம். லெட்சுமிதேவி சொன்னாள். அவள் போனாள். அவளைத் தொடர்ந்து தருமம் போனது. தருமம் போனால் நேர்மை கெடும். நேர்மை கெடக்கெட கீர்த்தியும் போய் விடும். எல்லாரும் போனதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீ கவலைப்படவில்லையா? இல்லை தேவா நீங்கள் யார்? என் பெயர் வாய்மை. அரசன் கோவென்று அழுதான் தொழுதான். காலில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மற்றவர்கள் போகும் போது தடுத்தாயா? இல்லை என்னை ஏன் தடுக்கிறாய்? என்னிடம் இருப்பது வாய்மை. நான் வாய்மையைக் காத்தவன். எந்தநபர் எதை விற்பனை செய்யக் கொண்டு வந்தாலும் இரவிலே அவர்கள் கவலையின்றி விடு திரும்ப வேண்டும். விற்பனை ஆகாத பொருட்களை வாங்குவதாக வாக்குக் கொடுத்தேன். யாரை நம்பி அவர்கள் விற்பனை செய்யவந்தார்கள் தேவா?

உன் வாய்மையை நம்பி!

அது ஒன்றுதான் என் சொத்து. நீங்களும் என்னை கைவிடலாமா? வாய்மை சற்றுத் தள்ளாடியது. அரசனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. சிலவிநாடிகள் சென்றன. வாய்மையைத் தேடி நேர்மை வந்தது. நேர்மையைத் தேடி கீர்த்தி வந்தது. கீர்த்தியைத் தேடி லெட்சுமி வந்தாள்.

யாவரும் அரசனைச் சுற்றி நின்றார்கள்.



''எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டான் அரசன்.

''எங்களுக்கு உயிர் தருவது வாய்மை. வாய்மைக்கு நாங்கள் உடல்''

''இப்போது நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள்?''

''வாய்மையை நாடி நாங்கள் வந்தோம். வாய்மை உனக்கு அடக்கம் அரசே.''

ஆகவே மீண்டும் நாங்கள் உனது அரண்மனை வாசிகள். வாய்மையைக் காத்துவரும் மன்னா! உனக்கு எங்கள் பாராட்டுக்கள் என்று கூறி அரண்மனையின் உள்ளே மகிழ்ச்சியுடன் சென்றனர். வாய்மை வென்றது.

— வ. ஆ. கஜேந்திரன் —
ஆண்டு - 8, நாமகள் வித்தியாசாலை,
கொக்குவில்.

## உலக மொழிகள்

அமெரிக்க மற்றும் பிரஞ்சு மொழியியல் வல்லுநர்கள் மொத்தம் 2796 மொழிகளை வரிசைப்படுத்தி உள்ளார்கள். அவற்றில் 1200 மொழிகள் அமெரிக்க இந்தியக் குடிகளினால் பேசப்பட்டு வருகின்றன. பெரும்பாலான மொழிகள் ஆயிரத்துக்கும் குறைவான மக்களால் மட்டுமே பேசப்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்க நீக்கரோ வகுப்பினர் 700 க்கும் அதிகமான மொழிகளைப் பேசுகின்றனர். ஆஸ்திரேலியா, நியூகினி மற்றும் பல பசுபிக் கடல்தீவுகளில் உள்ள மக்கள் ஏறக்குறைய 500 மொழிகள் பேசுகின்றனர். ஆசியாவில் 200 க்கும் மேற்பட்ட வளர்ச்சியடையாத மொழிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உலகில் வளர்ச்சி அடைந்த பெரிய மொழிகளின் (சுமார் 10 இலட்சம் அல்லது அதற்கு அதிகமானோர் பேசும் மொழி) மொத்த எண்ணிக்கை 160 ஆகும்.

# கவலைக்கு இடம் கொடாதே

— தீபன் —

வாழ்க்கை என்றால் முள்ளில் ஒட்டிக்கொண்டிருக்கும் தேனை வாயினால் வெகு எச்சரிக்கையுடன் உறிஞ்சி விழுங்குவது போலவே தான். எச்சரிக்கைக் குறைவாக வாயை வைத்து உறிஞ்சினாலும் முள்வாயைப் பதம் பார்த்துவிடும் - வேதனையை உண்டு பண்ணிவிடும். எனவே அவதானமாக நடைபோட்டு வெற்றி கொள்ள வேண்டியது தான் வாழ்க்கை.

வாழ்க்கைப் பயணத்தில் எந்தப் பாதையும் கவலை என்னும் முட்புதர்களின்றி மிருதுவானதாக காணப்படமாட்டாது. அதில் பள்ளங்களும் படுகுழிகளும் இருக்கத்தான் செய்யும். பள்ளத்தையும் படுகுழியையும் கண்டு பயந்து நடுங்குவதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. மாறாக இவைகளைப் பார்த்து சிரித்து விடுவது தான் இவைகளை வெல்வதற்கு ஒரே வழி என்றால் மிகையாகாது. ''துன்பம் வரும் கால் நகுக'' என்று வள்ளுவரும் கூறியிருப்பது இதன் உண்மை நிலையை எடுத்தியம்புவதாய் உள்ளது.

வெற்றியும் தோல்வியும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. வெற்றியைக் கண்டு பெருமிதம் கொள்வதும், தோல்வியைக் கண்டு துவண்டு போவதும் எம் வாழ்க்கைக்கு நன்மை பயற்காது. வெற்றி பெற்ற மமதையில் நாம் நிற்போமானால் நாளை தோல்வி நிச்சயம் எம்மை அணைத்துக் கொள்ளும். தோற்று விட்டோமே என்று கவலையை நெஞ்சில் படர விட்டோமேயானால் கவலை எம்மை படுகுழியில் வீழ்த்திவிடும். எனவே கல்வியிலோ விளையாட்டிலோ தோல்வியைக் கண்டு துயரம் கொள்ளாது வெற்றி கொள்ளவிடா முயற்சியுடன் எதிர் நீச்சல் போடுவதன் மூலமே சாதனையை நிலை நாட்டலாம். சரித்திரம் படைக்கலாம்.

கடும் மழையிலும் பெரும் புயலிலும் ஆடாது அசையாது நிற்கும் அரசமரத்தை பூச்சிகள் அரித்து வீழ்த்தி விடுவது போல கவலைக்கு இடம் கொடுத்தால் எமது உடலை கவலைகள் சிதைத்து விடும். எனவேதான் உலக மகாகவி ஷேக்ஸ்பியர் இலேசான இதயமே நெடுநாள் வாழும் என்று கூறினார்

அரசனாக இருந்தால் என்ன உழவனாக இருந்தால் என்ன யார் தன்னுடைய இல்லத்தில் அமைதியைக் காண்கிறானோ அவன்



தான் மிகவும் மகிழ்ச்சியானவன் என்றார் ஜேர்மனியக் கவிஞர். இவ்வாறு தோல்வியை வெற்றியாகவும் இழப்பை இலாபமாகவும் மாற்றிக் கொள்ள எம்மனதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவைதான் கவலையை வெற்றி கொள்ளும் ஒரேவழி.

கவலைக்கான காரணங்களில் முதன்மையானது ஐயம்தான். ஐயமே கவலையின் கரு என்று கூறலாம். எதற்கெடுத்தாலும் ஐயப்பட்டு, ஐயப்பட்டு வீணாக நம்மையே நாம் கவலைப்படுகுழியில் தள்ளிக் கொள்கின்றோம். மன அமைதி ஏற்படுவதற்கு மற்றொரு வழி சென்ற நாளைப்பற்றி கவலைப்படவோ வரும் நாளைப்பற்றி வருந்தி நிற்கவோ செய்யாது - நடந்ததை மகிழ்ச்சிக் கண்களுடனும் நடக்கப் போவதை நம்பிக்கைக் கண்களுடனும் பார்ப்பதுதான்.

பறவைகளைப் பாருங்கள்! விடியலைக் கண்டவுடன் தன் இறக்கையை விரித்தடித்து வானவெளியில் பறந்து எத்தனை மகிழ்ச்சியுடன் இரைதேடுகின்றன. பின்னர் மாலை தன் கூடுகளுக்கு எவ்வளவு மனநிறைவோடு திரும்புகின்றன. அவை சென்ற நாட்களைப் பற்றியோ இன்றைய நாட்களைப் பற்றியோ நடக்க இருக்கும் நாளைய நாட்களைப்பற்றியோ கவலைப்படுகின்றனவா? அவற்றிலிருந்தாவது நாம் பாடத்தைக் கற்றுக் கொள்ளக்கூடாதா என்ன......!

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்ற வள்ளுவர் கருத்துக்களை முன்வைக்கலாம். அதன்படி ஒழுகுவது கடினம் என்று நீங்கள் முணுமுணுப்பது எமக்கு கேளாமலில்லை.

ஆனால் உன் உள்ளத்திற்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அதைத் துணிச்சலுடன் செய். பிறர் அதைப் பற்றி என்ன கூறுகிறார்களோ என்று நீ கவலைப்படாதே. ஏனெனில் உலகில் எல்லாரையும் திருப்தி செய்வது என்பது ஒரு மனிதனால் இயலாத செயலாகும்.

எனவே துணிந்து நில், துணிந்து செய், தோல்வியைக் கண்டு துவளாது நிமிர்ந்து நில் நிச்சயம் கவலைகள் சூரியனைக் கண்ட பனி போல மறைந்து போகும். பிறகென்ன உள்ளப் பூரிப்போடு நீ உயர்ந்து நிற்பாய்.

# ★பாராட்டுக் கடிதங்கள்★

ச. கந்தசாமி
மே/பா, கா. இரத்தினசிங்கம்,
முருகமூர்த்திகோவிலடி முன்பாக,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை,
24 – 04 – 1994.

விநாயகர் தரும நிதியம்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

திருவனர் ஐயா அவர்கட்கு,

நாங்கள் தங்களின் இலவச நூல்களை அன்பர்களுக்கு விநியோகம் செய்யும் பொழுது, பெறுபவர்களின் மனோநிலை, ஞான வேட்கை அல்லது பசி, அறிவுப் பசி இவைகளைக் கவனித்தே விநியோகம் செய்து வருகின்றோம் என்பதை அன்புடனும், பணிவுடனும் அறியத் தருகின்றோம். குறிப்பிட்ட இலவச நூல்களை பெறுபவர்கள் நன்மையடைய வேண்டும், முன்னேற்றமடைய வேண்டும் என்ற நோக்கிலேயே விநியோகத்தை மேற் கொள்ளுகின்றோம் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம். மருத்துவ தொகுப்பு நூல்களை விநியோகம் செய்யும் பொழுது நோய் பிணிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கி வருகின்றோம். இலவச நூல்களை வீண் விரயம் செய்யக் கூடாது என்பதையும் கவனத்தில் எடுக்கின்றோம்.

சமுதாயத்தில் உள்ளவர்கள் பாராட்டவேண்டும் – வாழ்த்த வேண்டும் – விருதுகள், பட்டங்கள் வழங்கி பாராட்டு விழாக்கள் எடுக்கவேண்டும் – கௌரவிக்கப்பட வேண்டும் – என்றெல்லாம் நினைத்தோ – எதிர்பார்த்தோ – தாங்கள் பயன் கருதாப் பணி-தொண்டு – சேவை ஆற்றவில்லை என்பதை ஆண்டவனும் அறிவார். தேவர்களும் அறிவார், ஞானமேதாவிகளும் அறிவார் என்பதை பண்புடனும் பணிவுடனும் இருகரம் கூப்பி அறியத் தருகின்றோம்.

தாங்கள் தெய்வத் தமிழ் மொழி திருக்குறளுக்கும், பகவத் கீதைக்கும் உயிரோட்டம் வழங்கி தமிழ் அன்னையின் கண்கள் என விளங்கும் குறளுக்கும், கீதைக்கும் அணி – அழகு செய்வதையிட்டு மட்டில்லா ஆனந்தம் அடைகிறோம். திருக்குறளிலும், பகவத்கீதையிலும் காணப்படுகின்ற, பேசப்படுகின்ற தத்துவங்கள், அறிவுரைகள், ஞானக்கருவூலங்கள், சிந்தனைகள், வாழ்க்கை அறநெறி முறைகள், தியாகங்கள் முதலியன தங்களின் வாழ்க்கையில் காணப்படுவதையிட்டும் – பிரதிபலிப்பதையிட்டும் அன்புடனும், பண்புடனும், பணிவுடனும் இருகரம் கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.



நாங்களும் பெயர், புகழ், விளம்பரம் கருதியோ அன்றி சுயலாமம் எதிர்பார்த்தோ தங்களை பாராட்டவில்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றோம்.

''அறத்தமிழ் ஞானம்'' என்ற மலரில் தங்களின் எண்ணங்கள், சிந்தனைகள் வெளியிட்டு வருகின்றீர்கள். ஐந்து பூத தத்துவங்கள் சம்பந்தமாக தங்களின் அனுபவங்களையும், உண்மைகளையும் வெளியிட்டு வருகின்றீர்கள்.

ஐந்துபூத தத்துவங்கள் சம்பந்தமான ஆய்வுகள், சிந்தனைகள், விளக்கங்கள், உண்மைகள் ஒளிப்பூத விகிதாசாரம் கூடியவர்களுக்கே தான் நன்றாக விளங்கவும், கிரகிக்கவும், உட்கொள்ளவும் முடியும் என்பதையும் பண்புடனும், பணிவுடனும் அறியத் தருகின்றோம்.

''மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டுமரமுண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு அநேக குல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார்
முன்னோர்''

---

அராலி களவத்துறை சனசமூக நிலையம்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை,
23 – 03 – 1994

விநாயகர் தரும நிதியம்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

ஐயா!

இந்த இக்கட்டான காலங்களிலும், பொருள்கள் வழங்கியும், பல்வேறு வெளியீடுகளை வெளியிட்டும் தொண்டாற்றி வருவதற்காக எமது சனசமூக நிலையம் தங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. நாங்கள் அறிந்தவரை இப்படியான ஒரு தொண்டு நிறுவனம் இலங்கையிலும், இந்தியாவிலும் இருப்பதை அறியோம். இது ஓர் அற்புதமான தொண்டு என மேன்மேலும் வாழ்த்தி நீடூழி வாழவென வாழ்த்துகிறோம்.

மா. ஜெயராசா
செயலாளர்

வை. சிவநாதன்,
'தேவிவாசம்'
இணுவில்மேற்கு,
சுன்னாகம்.

திருவனர்,
விநாயகர் தரும நிதியம்.
கனம் ஐயா அவர்கட்கு,

தங்களின் ஆன்மா உருவாகும் விதமும், மனிதனின் தெய்வீகப் பண்புநிலையும், திருவாசகம் காட்டுகின்ற வழி முறைகளும் என்னும் இலவச வெளியீட்டுப் புத்தகத்தை முழுமையாகப் படித்தேன்.

தாங்கள் இந்தப் புத்தகத்தில் எத்தனையோ விடைகாண முடியாத வினாக்களுக்கு விடை தர முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றீர்கள். தங்களின் நூலில் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் தனது இடைவெளியை நிரப்புவதற்கு உரிய காரணங்கள் நன்கு ஆராயப் பட்டிருப்பதாக நான் நம்புகிறேன்.

## தமிழ்நாட்டில் பத்திரிகைகள் விற்பனை — 1993

நாளிதழ்கள் ★ தினத்தந்தி: சென்னை - மதுரை - திருச்சி கோவை திருநெல்வேலி, வேலூர், கடலூர், சேலம், பெங்களூர், பாண்டிச்சேரி. 3, 26, 528 பிரதிகள்.

★ தினமலர்: மதுரை, சென்னை, திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு, பாண்டிச்சேரி. கோவை 2, 32, 901 பிரதிகள்

★ தினமலர் மதுரை, சென்னை, கோவை 154962 பிரதிகள்.

**வார இதழ்கள்**

| | | |
|---|---|---|
| குமுதம் | — | 3, 88, 993 |
| ராணி | — | 2, 62, 689 |
| ஆனந்தவிகடன் | — | 2, 22, 764 |
| ஜூனியர்விகடன் | — | 2, 08, 302 |
| கல்கண்டு | — | 1, 26, 347 |



# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு — பருத்தித்துறை.

01 - 04 - 1990 — 31 - 03 - 1991 வரை 382999
01 - 04 - 1991 — 31 - 03 - 1992 வரை 1086436
01 - 04 - 1992 — 31 - 03 - 1993 வரை 1194961

ஊனம் உற்றோர் உதவி 01 - 04 - 93—31 - 03 - 94 வரையான

## கணக்கு விபரம்

| | |
|---|---|
| ஊனம் உற்றோர் உதவி | 55991— |
| முதியோர் உதவி | 9010— |
| ஊனம் உற்றோர் பிடவை விநியோகம் | 5045— |
| நூல் வெளியீடு (மொத்தமாக) 01-04-93 — 31-03-94 | 296071— |
| வதிரி பரமானந்த ஆச்சிரமம் அரிசி விநியோகம் | 14472— |
| நன்கொடை 10 வாசிகசாலை பத்திரிகை அன்பளிப்பு | 11463— |
| ,, பாலர் பாடசாலைகளுக்கான 700 கற்பலகை(சிலேற்) | 31570— |
| ,, விழாக்கள் சம்பந்தமானவை | 5964— |
| ,, வெளியார் வெளியீட்டு அன்பளிப்பு | 9400— |
| ,, புத்தக விநியோகச் செலவு | 10300— |
| தேசிய விழாக்கள் | 4200— |
| உறுப்பெழுத்து கொப்பி மொத்தம் 2793 பிரதிகள் (விற்பனை நீக்கி) (23390 - 9170) | 14220— |
| அறநெறிப் போட்டிப் பரிசுகள் | 2875— |
| விநாடி வினா போட்டிப் பரிசுகள் | 2805— |

நான்கு சனசமூக நிலையங்களின் சேமிப்பு வைப்புப் பணம் திரும்பிப் பெற்ற வகையால் 88000
நான்கு சனசமூக நிலையங்களுக்கு சேமிப்பு வைப்பு வட்டிப் பணம் கொடுத்தது 20861
அகராதி விற்றுவரவு 4685

மொத்தம் 473286—

நாலு லட்சத்து எழுபத்து மூவாயிரத்து இருநூற்றி எண்பத்தி ஆறு ரூபா.

ஆ. சி. முருகுப்பிள்ளை
திருவனர்

14 - 08 - 1994

## நூல்வெளியீட்டு விபரங்கள்

| | பிரதிகள் | ரூபா |
|---|---|---|
| அறத்தமிழ் ஞானம் சித் - வைகா - ஆனி | 1600 | 28800— |
| அறம் வளர் இளந்தமிழ் வைகாசி | 2100 | 21000— |
| மூலிகை மருத்துவம் | 1000 | 34650— |
| அறத் தமிழ் ஞானம் ஆடி - ஆவணி | 1600 | 21000— |
| அறம் வளர் இளந் தமிழ் ஒளி 2 சுடர் 1 | 1960 | 17200— |
| அறநெறிச் சிந்தனை | 2700 | 21330— |
| மருத்துவ இதழ் மறுபதிப்பு | 1200 | 33300— |
| அ. த. ஞானம் ஐப் - கார் - மார்கழி 93 | 1960 | 21431— |
| திருக்குறள் | 3220 | 37030— |
| உறுப்பெழுத்துக் கொப்பி | 3400 | 9900— |
| அறம் வளர் இளந்தமிழ் | 2100 | 17640— |
| நீதிப்பொருள் (மறுபதிப்பு) | 934 | 10180— |
| பிரபஞ்ச தத்துவம் (மறுபதிப்பு) | 934 | 9100— |
| அறத் தமிழ் ஞானம் தை - மாசி - பங்குனி | 1393 | 13510— |
| | மொத்தம் | 296071— |

### தொங்குபூங்கா

மகத்தான ஏழு உலக அதிசயங்களில் ஒன்று பாபிலோன் பூங்காவாகும். 2500 ஆண்டுகளுக்கு முன் நேபுதனேஜார் அரசன் தனது ராணியின் ஆசையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் தனது அரண்மனையின் மதில்களின் நாற்புறங்களிலும் அழகிய பூங்காக் களையும் அமைத்தான். உயரமான மதிற் சுவர்களின் மேலமைந்த இப்பூங்காக்களுக்கு நீர்பாய்ச்சினார்கள். இந்தப் பூஞ்செடிகள் தொங்கிக் கொண்டிருக்கும் பூங்காவாகப் பார்ப்போருக்குத் தெரிந்தன. கி. பி. 514-இல் போஷியாவின் படையெடுப்பு நிகழ்ந்தது. அப்படையெடுப்பின் விளைவாக இந்தத் தொங்குபூங்கா அழிந்து போனது.

— அறிவுக் களஞ்சியம் —

## விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு — பருத்தித்துறை.

விநாயகர் = தொழில் புரிவதற்குரிய எண்ணத்தை உள்ளத்திலே உருவாக்குபவன். காற்றுப்பொருள். எண்களில் "க 3" ரெகங்களில் வியாழபகவான்.

ஞாபகார்த்த நிதி = திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி. ஆ. சி. இராசம்மா
( வ. க. கோ. சரவணமுத்துவின் மகள் )
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி
கருமயோகப் பணி.

### தர்மகர்த்தா சபை

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்.
திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
B. A. ( Lond ) சட்டத்தரணி, உபதலைவர் 16 - 11 - 1993 வரை
திரு. வ. ச. செல்வராசா
செயலாளர் - பொருளாளர்
திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி 07 - 04 - 1994 வரை

கௌரவ உறுப்பினர்கள்

திரு. பா. குமரகுரு 12 - 12 - 1993 முதல்
திரு. அ. துரைசிங்கம் 03 - 01 - 1994 வரை
திரு. சு. வேதாரணியம்
திருமதி கோ. கண்மணி
திரு. ஆ. க. சிவப்பிரகாசம் [illegible] 01 - 1994 முதல்
திரு. கி. திருநாவுக்கரசு [illegible] 994 முதல்

கௌரவ உப உறுப்பின[illegible]
திரு. க. கேதீஸ்வரநாதன்
திரு. ஆ. சு. பொன்னம்பல[illegible]
திரு. க. பாலகிருஷ்ணபிள்[illegible]

உ

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.

---

★ பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற ச. ச. நி.

★ சி. சி. வரதராசா – கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி – கோணாவளை கிழக்கு, கொக்குவில்

★ வழி கலை இலக்கிய வட்டம் – சுன்னாகம்.

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவ. – கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம் – பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கல்விச்சோலை வல்வெட்டித்துறை.

★ ஸ்ரீராம் மருந்தகம் – நீர்வேலி

★ சின்னஜ்யா ஸ்ரோர்ஸ் – கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம் – சாவகச்சேரி.

★ [illegible] பாமசி – புத்தூர்.

★ பி. வி. ராஜன் புத்தகசாலை – நுணாவில்.

---

இவ் வெளியீடு புலோலி மேற்கு நாயகர் தர்ம நிதியத்திற்காக நாயகர் தரும நிதிய அச்சகத்தில் —32 பதிப்பிக்கப்பெற்றது.